பாப்தாதாவின் சைகை
''எல்லையற்ற வைராக்கிய உணர்வோடு இருங்கள்''

1. எவ்வளவு சினேகியாக இருக்கிறீர்களோ அவ்வளவு எல்லையற்ற வைராக்கியமும் இருக்க வேண்டும். இதுதான் மதுவனத்தின் அர்த்தம். அதிக பிரியம் மேலும் அதேயளவு எல்லையற்ற வைராக்கியம். ஒரு வேளை மதுவனத்தின் விசேச குணங்களை வாழ்க்கையில் தாரணை செய்துகொண்டே சென்றால் எளிதில் சம்பூரணமாகிவிடுவீர்கள்.

ஒன்று சினேகத்தால், இரண்டாவது எல்லையற்ற வைராக்கிய உணர்வால் எந்தப் பிரச்சினையையும் எளிதில் சமாளிப்பீர்கள். வெற்றி நட்சத்திரமாவதற்கு இந்த இரண்டு முக்கிய குணங்களையும் மதுவனத்தின் பரிசாக எடுத்துச் செல்லுங்கள்.

இப்போது அப்படி மாறிக்காட்டுங்கள், அதன்மூலம் அனைவரின் முன்னே உதாரணமாகுங்கள். இப்போது ஒரு நொடியைக்கூட இழக்கக்கூடாது. உங்களால் சோதித்துப் பார்க்க முடியும். இப்போது நேரம் மிகக் குறைவாகவே மீதமிருக்கிறது. நேரமும் எல்லையற்ற வைராக்கிய உணர்வை தோற்றுவிக்கிறது. எனினும் நேரத்திற்கு முன்னதாக, யார் தனது முயற்சியின் மூலமாகச் செய்கிறார்களோ அவர்களுக்கு பலன் அதிகமாகக் கிடைக்கும். யாருக்கு தன்னால் செய்யமுடியவில்லையோ அவருக்கு நேரம் உதவி செய்யும். ஆனால் அதனால் நேரத்திற்கு பெருமை கிடைக்கும். தனக்கு கிடைக்காது. 26.01.1970

2. இப்போது இந்த தீவிர முயற்சி செய்ய வேண்டும். இந்தப் பழைய உலகின்மீது மிக எளிதாக எல்லையற்ற வைராக்கியத்தை கொண்டுவருவதற்குரிய சாதனம் எது? (சிலர் ஏதோ சொன்னார்கள்) யார் எந்த விசயத்தைச் சொன்னீர்களோ அதை எளிது என உணர்ந்து சொன்னீர்கள் இல்லையா. ஒருவேளை சகஜமாக இருந்திருந்தால் எளிதில் எல்லையற்ற வைராக்கியமுடையவராகி இருப்பீர்கள். ஒருவேளை தன் மீதே பிரயோகிக்க வில்லையென்றால், பிறரிடம் அதை எப்படி கொண்டுவருவீர்கள். எல்லையற்ற வைராக்கியம் என்று சொல்கிறீர்கள். யார் வைராக்கியம் உடையவராக இருக்கிறாரோ அவர் எங்கே வசிக்கிறார்? எல்லையற்ற வைராக்கியாக வேண்டும் என்றால் எப்போதும் தன்னை மதுவனத்தில் வசிப்பவராக உணருங்கள் என்ற எளிய உத்தி சொல்லப்படுகிறது. எனினும் மதுவனத்தை வெறுமையாகப் பார்க்காதீர்கள். மதுவனம் எப்போதும் மதுசூதனனோடு இருக்கிறது. எனவே மதுவனம் நினைவிற்கு வந்தவுடனே, பாப்தாதா, தெய்வீகக் குடும்பம், தியாகம்-தபஸ்யா சேவை எல்லாம் நினைவிற்கு வந்துவிடுகிறது. மதுவனம் தவ பூமியாகவும் இருக்கிறது. மதுவனம் ஒரு நொடியில் அனைத்தையும் தியாகம் செய்ய வைத்துவிடுகிறது. இங்கே எல்லையற்ற வைராக்கியம் உடையவராகிவிட்டீர்கள் இல்லையா. எனவே தியாகியாக வைராக்கியாக மாற்றுவதே மதுவனம். எப்போது எல்லையற்ற வைராக்கியம் உடையவராகிறீர்களோ அப்போது எல்லையற்ற சேவை செய்ய முடியும். எங்கும் ஈர்ப்பு இருக்கக்கூடாது. துன் மீது தான் பற்றை உருவாக்கக்கூடாது என்கிறபோது மற்றவர் விசயத்தை விட்டுத் தள்ளுங்கள். 02.07.1970

3. **நான் நிராகாரத்திலிருந்து (அரூபம்) சாகாரத்திற்கு (உருவம்) வந்து இந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறேன் என்ற நினைவு எப்போதும் இருக்க வேண்டும்**. இடையிடையே ஒவ்வொரு வேலையையும் செய்துகொண்டே இந்த நிலையை பயிற்சி செய்துகொண்டிருங்கள். அப்படி நிராகாரத்தில் இருந்து சாகாரத்திற்கு வருவதன் மூலம் அகந்தையற்றவராகவும், விகாரமற்றவராகவும் நிச்சயம் மாறிவிடுவீர்கள். இந்த பயிற்சியை சில நேரம் செய்தும் வருகிறீர்கள், ஆனால் சதாகாலத்திற்கு மாற்றி விடுங்கள். சொல்லப்போனால் வைராக்கியாகவும் மாறி இருக்கிறீர்கள், வைராக்கிய உணர்வும் இருக்கிறது, ஆனால் சதா காலத்திற்கு, எல்லையற்ற வைராக்கியம் உடையவராக ஆகவேண்டும். இல்லையென்றால் ஏதாவது

எல்லைக்குட்பட்ட பொருள் உங்களை வைராக்கிய உணர்வில் இருந்து விலக்குவதற்கு நிமித்தமாகிவிடும். 15.09.1971

4. வருங்காலத்தில் நடக்கப்போகிற பேரழிவுகளும், வரப்போகிற புது உலகமும் உங்கள் முகத் தோற்றத்தில் தெரிய வேண்டும். அது தெரிந்தால் பிறகு வைராக்கியம் தானே வந்துவிடும். ஒரு புறம் வைராக்கியமும் மறுபுறம் தனது வருங்காலத்தை உருவாக்குவதற்கான உற்சாகமும் பிறக்கும். ஒரு கண்ணில் முக்தி, இன்னொரு கண்ணில் ஜீவன்முக்தி என்று சொல்கிறீர்கள் அல்லவா அதன்படி **அழிவு, முக்தியின் கதவாகவும், ஸ்தாபனை, ஜீவன்முக்தியின் கதவாகவும் இருக்கிறது. எனவே இரண்டு கண்களிலும் இது தெரிய வேண்டும்.** இந்தப் பழைய உலகம் முடியப் போகிறது என்பதை உங்கள் கண்கள் மற்றும் நெற்றி சொல்ல வேண்டும். நெற்றியும் நிறையப் பேசுகிறது. சிலருடைய பாக்கியத்தை நெற்றி சுட்டிக்காட்டுகிறது, இவர் பெரிய அதிசயமானவர் என புரிந்துகொள்கிறார்கள். எனவே எப்போது இப்படி சேவை செய்கிறீர்களோ அப்போது வெற்றி முழக்கம் கேட்கும். எனவே இப்போது உலகத்தின் முன்னால் உதாரணமாக வேண்டும். 19.07.1972

**5. ஒரு புறம் இனிமை, மறுபுறம் அதேயளவு எல்லையற்ற வைராக்கிய உணர்வு. வைராக்கிய உணர்வின்மூலம் கம்பீரமூர்த்தியாக(சீரியஸ்)மட்டும் இருப்பீர்களா?** இல்லை, உண்மையான கம்பீரத்தில் குதூகலமும் கலந்திருக்கிறது. அந்த அஞ்ஞானி மனிதர்களிடம் கம்பீர ரூபம் இருக்குமானால் முற்றிலும் கம்பீரமாக இருப்பார்கள், குதூகலத்தின் பெயரடையாளம் எதுவும் இருப்பதில்லை. ஆனால் உண்மையான கம்பீர குணத்தில் குதூகலத்தின் பண்புகள் நிறைந்திருக்கிறது. ஆத்மாக்கள் நாம் அமைதி சொரூபமாக இருக்கிறோம் எனினும் அதில் அமைதி மட்டும் இருப்பதில்லை ஆனால் அந்த அமைதியில் ஆனந்தம், அன்பு, ஞானம் எல்லாம் கலந்திருக்கிறது என நீங்கள் மற்றவர்களுக்கு விளக்கமளிக்கிறீர்கள் இல்லையா. அதேபோல எல்லையற்ற வைராக்கிய மூர்த்தியாக இருப்பவர்களிடம் இனிமையும் கூடவே இருக்கும். இது மதுபன் நிவாசிகளின் சிறப்பாக இருக்கிறது. எனவே யார் எல்லையற்ற வைராக்கிய உணர்வில் இருக்கிறார்களோ அவர்கள் எப்போதாவது பயப்படுவார்களா என்ன? தடுமாற்றம் வர முடியுமா? அசைக்க முடியுமா? எவ்வளவுதான் வேகமாக அசைத்தாலும் எல்லையற்ற வைராக்கிய உணர்வு உடையவர்கள் 'ந‰ டோமோகா ஸ்மிருதி' (மோகமற்ற நினைவு) சொரூபத்தில் உறுதியாக இருப்பார்கள். எனவே மோகமற்ற நினைவு சொரூபம் இருக்கிறதா? அல்லது ஏதாவது நிறை குறையை பார்த்து, சிறிதளவு சினேகம் என்றாலும் சரி, மோகம் என்றாலும் சரி, ஆனால் சினேகத்தின் சொரூபம் என்னவாக இருக்கிறது, அதை எல்லோரும் அறிந்திருக்கிறீர்கள் தானே? யாரிடம் சினேகம் இருக்கிறதோ அவருக்கு உதவிகரமாக இருக்க வேண்டும். மற்றபடி ஏதாவது பழக்க வழக்கத்தின் காரணமாக நட்பின் வடிவம் தோன்றினால் அதை சினேகம் என்று சொல்வீர்களா அல்லது மோகமென்று சொல்வீர்களா? 19.09.1972

6. ஏதாவது துர்கதியின் பழக்க-வழக்கம், அது ஸ்தூலமாக இருந்தாலும் சரி, சூட்சுமமாக இருந்தாலும் சரி அதன்மீது வைராக்கியம் வரவேண்டும். எப்படி ஞானத்தின் ஆதாரத்தில் பக்தியின் ஸ்தூல சாதனங்களின் மீது வைராக்கியம் வந்துவிட்டதோ, அதேபோல இந்த பக்திமார்க்க பழக்கங்களின்மீதும் வைராக்கியம் வரவேண்டும். இந்த வைராக்கியம் வந்த பிறகே நினைவின் வேகத்தை அதிகரிக்க முடியும். இல்லையென்றால் எவ்வளவு வேண்டுமானாலும் முயற்சி செய்து பாருங்கள், பக்தர்கள் பகவானின் நினைவில் அமர்வதற்கு எவ்வளவோ முயற்சி செய்கிறார்கள் எனினும் அமர முடிகிறதா? எவ்வளவோ தன்னை வருத்திக் கொள்கிறார்கள், கடினமான வழக்கத்தை கடைப்பிடிக்கிறார்கள், பல வகைகளில் நேரம் ஒதுக்குகிறார்கள், செல்வத்தை செலவழிக்கிறார்கள், இருந்தும் முடிகிறதா? அதேபோல இங்கும் **துர்கதி மார்கத்தின் பழக்க-வழக்கங்கள்** இருக்கும்வரை நினைவு யாத்திரையின் வேகத்தை அதிகரிக்க முடியாது, நிரந்தர நினைவு இருக்கமுடியாது. 22.11.1972

7. இப்போது எந்த அளவு எல்லையற்ற பரந்த சேவையை தீவிரமாக செய்து கொண்டிருக்கிறீர்களோ அந்த அளவு எல்லையற்று விடுபட்டிருக்கும் (உப்ராம்) உணர்வும் தீவிரமாக இருக்க வேண்டும். உங்களது எல்லையற்று விடுபட்டிருக்கும் உணர்வு அல்லது வைராக்கிய உணர்வு உலகில் உள்ள ஆத்மாக்களிடம் அற்பகாலத்திற்கு வைராக்கியத்தை தோற்றுவிக்கும். அப்போது தங்கள் சுகத்தின் மீது வைராக்கியம் கொள்வார்கள். அப்போதுதான் வைராக்கியத்திற்கு பிறகு முடிவு வரும். என்ன, எனக்குள் எல்லையற்ற வைராக்கிய உணர்வு இருக்கிறதா? என தன்னைத்தானே கேளுங்கள். செய்தும் செய்யாமல் இருப்பவர், உற்றார் உறவினரோடு இருந்தபோதும் பட்டும் படாமல் இருப்பவர் என்ற புகழ் இருக்கிறதல்லவா, அந்த நிலை இருக்கிறதா? எந்தவித ஈர்ப்பும் இருக்கக்கூடாது, சேவைகூட ஆசை வயப்பட்டு செய்யக்கூடாது. ஆனால் நிமித்த உணர்வில் இருந்து செய்ய வேண்டும், அதன்மூலமாக செயல்களை கடந்தவராகி (கர்மாதீத்) விடுவீர்கள். இப்போது தமது செயல்களை சுருட்டி வைக்க ஆரம்பியுங்கள். இப்போதிருந்தே சுருட்ட ஆரம்பித்தால்தான் சீக்கிரம் முடிக்க முடியும். சுருட்டி வைப்பதற்கும் நேரம் பிடிக்கிறது. 03.02.197

8. எப்போதும் எல்லையற்ற வைராக்கிய உணர்வு உடையவராக இருங்கள். **எல்லையற்ற தியாகி, எல்லையற்ற சேவாதாரி மற்றும் எல்லையற்ற வைராகி. இந்த மூன்று நிலைகளையும் கடந்து செல்பவரே உலக-மகாராஜன் ஆகமுடியும்.** கூடவே கடைசியில் லைட் மற்றும்மைட் ஹவுஸ் ஆக முடியும். இந்த மூன்று நிலைகளிலும் தான் எதுவரை வந்திருக்கிறேன் என்பதை தன்னைத்தானே சோதித்து அறியுங்கள். தானே தனக்கு நீதிபதியாகுங்கள். தர்மராஜபுரிக்கு செல்வதற்கு முன்பாக யார் தானே தனக்கு நீதிபதியாக ஆகிறார்களோ, அவர்கள் தர்மராஜபுரியின் தண்டனையில் இருந்து தப்பிவிடுகிறார்கள். 27.09.75

இன்று பாப்தாதா எந்த சபையை பார்த்துக்கொண்டிருக்கிறார்? இது ராஜரிஷிகளின் சபையாக இருக்கிறது. தன்னை எப்போதும் ராஜரிஷி என உணர்ந்து நடந்துகொள்கிறீர்களா? ஒருபுறம் ராஜ்ஜியம், மறுபுறம் ரிஷி இரண்டின் இலட்சணங்களும் தனித்தனியானது. அது பாக்கியம், இது தியாகம். அது அனைத்திற்கும் அதிகாரி, இது பிறகு, ரிஷி என்றால் எல்லையற்ற வைராகி. அனைத்தின் அதிகாரி மற்றும் எல்லையற்ற வைராகி. அது அனைவருக்கும் பிரியமானது இது அனைத்திலிருந்தும் விடுபட்டது .இரண்டு இலட்சணங்களும், சொல் மற்றும் செயலில் எப்போதும் ஒன்றாக இருப்பது தெரிய வேண்டும். **தற்போதய சுயராஜ்ஜியம் அதாவது இந்த அனைத்து கர்மேந்திரியங்கள்மீது சுயத்தின் ஆட்சி இருப்பது -இதைத்தான் சுயராஜ்ஜியம் என்று சொல்லப்படுகிறது. அப்படி இருப்பவரே வருங்காலத்தில் இரட்டை ராஜ்ஜிய அதிகாரியாகிறார்**. இரட்டை இராஜ்ஜியத்தின் போதை எப்போதும் இருக்கிறதா? எந்த அளவு இராஜ்ஜியத்தின் போதை இருக்கிறதோ அந்த அளவு எல்லையற்ற வைராக்கியம் அதாவது ரிஷி ரூபம் எப்போதும் நினைவில் இருக்கிறதா?

இந்த பழைய தேகம் மற்றும் தேகத்தின உலகின் மீது எல்லையற்ற வைராக்கிம் உடையவராகி விட்டீர்களா? அல்லது இப்போதும் இந்த பழைய தேகம் மற்றும் உலகம் தன்பக்கம் கவர்ந்து இழுக்கிறதா? இது சுடுகாடாக அனுபவமாகிறதா? எல்லோரும் உணர்விழந்த ஆத்மாக்களாக தெரிகிறார்களா அல்லது வெறும் சோல்லில் மட்டும் இருக்கிறதா? அவர்கள் எல்லாம் இறந்துவிட்டவர்கள் அதாவது இந்த உலகம் சுடுகாடாக இருக்கிறது. எதுவரை இந்த உணர்வு வரவில்லையோ அதுவரை எல்லையற்ற வைராக்கியம் உடையவர் ஆகமுடியாது. எனவே எதுவரை இந்த உலகம் மயானபூமியாக இருக்கிறது என்பது அனுபவமாகவில்லையோ, சதா காலத்திற்கான எல்லையற்ற வைராக்கியத்தின் அனுபவம் என்பது எப்படி ஏற்படும்? 07.10.75

9. உலகில் மாற்றம் வருவதற்கு முன்பாக உலகில் உள்ள அனைத்து ஆத்மாக்களிடமும் வைராக்கிய உணர்வு வரும். மேலும் வைராக்கிய உணர்வின் மூலமாக, ஆத்மாக்கள் நம்முடைய தந்தை வந்துவிட்டார் என்று பாபாவின் அறிமுகத்தை ஏற்றுக்கொள்வார்கள். எனவே எப்படி உலக ஆத்மாக்களிடம், வைராக்கிய உணர்வே மாற்றத்திற்கு ஆதாரமாக இருக்கிறதோ அப்படி நிமித்தமாகியுள்ள ஆத்மாக்கள் இருக்கிறார்கள் அல்லவா, அவர்களிடத்திலும் முழுமையான மாற்றம் வருவதற்கு எல்லையற்ற வைராக்கியமே ஆதாரமாக இருக்கிறது. எனவே கூட்டத்திலும் எல்லையற்ற உணர்வை கொண்டுவருவதற்கு முயற்சி செய்யுங்கள். ஒருவர் பிறருக்கு துணையாக அல்லது உதவியாக இருங்கள். எப்போது வைராக்கிய உணர்வு வெளிப்படையாக இருக்கிறதோ அப்போது, பழைய சுபாவம் அல்லது சமஸ்காரம் மிக விரைவாகவும் எளிதாகவும் அந்த வைராக்கிய உணர்விற்குள் அமிழ்ந்து போய்விடும். பழையது எல்லாம் மறந்துவிட்டால் என்னவாகும் என்று எல்லோரும் யோசிக்கிறீர்கள் இல்லையா. மனிதர்களுக்கு எப்போது எல்லைக்குட்பட்ட வைராக்கியம் வருகிறதோ அப்போது கவர்ந்திழுக்கிற பழைய சுபாவம் மற்றும் சமஸ்காரம் எல்லாம் முடிந்து போக, அந்த வைராக்கிய உணர்வே ஆதாரமாகிறது. இதன் மூலமாகவே மாற்றம் வரும்.

இப்போது அப்படிப்பட்ட பூமியை தயார் செய்யுங்கள் மேலும் எல்லையற்ற வைராக்கியமுடைய குழுவையும் உருவாக்குங்கள், அவர்களுடைய அதிர்வலைகள் மற்றும் வாயுமண்டலத்தின் மூலமாக மற்ற ஆத்மாக்களிடத்திலும் அந்த சமஸ்காரம் விழிப்படைய வேண்டும். எப்படி சேவாதாரிகளின் குழு இருக்கிறதோ அதேபோல எல்லையற்ற வைராக்கியமுடையோரின் குழு வலிமையாக இருக்க வேண்டும். அவர்களைப் பார்த்தவுடனே மற்ற ஆத்மாக்களிடமும் அந்தமாதிரி அதிர்வலைகள் தோன்ற வேண்டும். ஒருபுறம் எல்லையற்ற வைராக்கிம் இருக்கும் மறுபுறம் பாபாவிற்குச் சமமாக பாபாவுடைய அன்பில் கலந்திருப்பீர்கள், அப்போதே எல்லையற்ற வைராக்கிய உணர்வு வரும். இந்த அன்பில் கலந்த நிலையில் இருந்து ஒரு நொடிகூட, ஒரு எண்ணத்தில்கூட கீழே வரமாட்டீர்கள். அப்படிப்பட்ட, அன்பான பாபாவுடைய, அன்பான குழந்தைகளின் குழு இருக்க வேண்டும். அதைத்தான் அன்பில் கலந்த குழு என்று சொல்லப்படுகிறது. ஒருபுறம் அதிக அன்பு மறுபுறம் எல்லையற்ற வைராக்கியம், இரண்டு குழுவும் ஒன்றாக சரிசமமாக தெரியவேண்டும், அப்படிப்பட்ட குழுவை உருவாக்குங்கள் அப்போது அந்தநாள் தெளிவாகத் தெரியும். இந்தக் குழுவே அந்த நாளை வெளிப்படுத்தும். 21.10.75

10. எல்லையற்ற வைராக்கிய உணர்வை டீச்சர்கள் தங்களிடம் அனுபவம் செய்கிறீர்களா? எல்லையற்ற வைராக்கிய உணர்வு என்றால், தனது தியான மையங்கள் அல்லது ஆட்கள் மீது பற்றில்லாமல் இருப்பது. எப்போது இந்த பற்றின் மீது எல்லையற்ற வைராக்கிய உணர்வு வருகிறதோ அப்போது வெற்றி முழக்கம் கேட்கும். எல்லாவித ஸ்தூல, சூட்சும சாதனங்களின்மீது எல்லையற்ற வைராக்கிய உணர்வு வர வேண்டும். அப்படிப்பட்ட பூமி தயாராகி இருக்கிறதா அல்லது தியான மையத்திலிருந்து கொஞ்சம் மாற்றினாலும் ஆடிவிடுவீர்களா? ஆட்கள்மீது இரக்கம் வராதா? கொஞ்சம்கூட அவர்களைக்குறித்த எண்ணங்கள் வராதா? அப்படிப்பட்ட சோதனை வந்தால் மோகமிருக்காதா? என தன்னைச் சோதனை செய்ய வேண்டும். இப்போது கட்டளை கிடைத்தால் எவரெடியாக இருக்கிறேனா? இந்த தியான மையத்தில் சேவை நன்றாக இருக்கிறது என்றால் அந்த நல்ல சேவையின்மீதும் பற்றில்லையா? என தன்னை மிக நுணுக்கமாக சோதனை செய்யுங்கள். எப்போது அனைத்திலிருந்தும் விலகி இருக்கிறீர்களோ, அதைத்தான் எல்லையற்ற வைராக்கிய உணர்வு என்று சொல்லமுடியும். தனது சரீரத்திலிருந்தும் விலகி இருக்க வேண்டும். அதாவது சேவைக்காக நிமித்தமாக அதை நடத்த வேண்டும்.

புத்தி அடிக்கடி பாபாவிடம் இருந்து விலகி வேறுபக்கம் சென்றதென்றால் அதை பற்றென்று புரிந்து கொள்ளுங்கள். இதுதான் பற்று இருப்பதன் அடையாளமாகும். தன்மீதும் தான்

விருப்பமில்லாமல் இருக்க வேண்டும். தன்னிடம் என்ன விசேசம் இருக்கிறதோ, சிலரிடம் கையாளும் திறன் நன்றாக இருக்கிறது அல்லது சிலரிடம் பேச்சாற்றல் இருக்கிறது என்றால் நான் அப்படி இருக்கிறேன் என்று சொல்கிறீர்கள். எனினும் அவைகள் பாப்தாதாவால் கொடுக்கப்பட்டது. தனது ஞானத்தின் விசேசமோ அல்லது எந்த விசேசமாக இருந்தாலும் சரி, அதன்மீதும் பற்று இருக்கக்கூடாது. அதன்மீதும் அபிமானம் வந்துவிடுகிறது. ‘‘இவைகள் பாபாவிடமிருந்து கிடைத்திருக்கிறது. இவைகள் அனைத்து ஆத்மாக்களின் பணிக்காக எனக்கு கிடைத்திருக்கிறது, அதை கொடுத்துக்கொண்டிருக்கிறேன், நான் அதற்கு நிமித்த மாக இருக்கிறேன்’’ என்பதை புத்தியில் வையுங்கள். அப்படிப்பட்ட எல்லையற்ற வைராக்கிய உணர்வுடைய குழு டீச்சர்களிடம் இருக்க வேண்டும். அப்போது நடக்கும்போது, பார்க்கும்போது மற்றும் பேசும்போது இவர்கள் எல்லையற்ற வைராக்கியம் உடையவர்கள் என்பதை அனைவரும் உணரவேண்டும். ஞானத்தைக்கொண்டு சேவை செய்வதில் கெட்டிக்காரர் களாக இருக்கிறீர்கள், அதை அனைவரும் உணர்கிறார்கள். இப்போது எல்லையற்ற வைராக்கியத்தை அனுபவம் செய்யுங்கள், அதை மற்றவரும் அனுபவம் செய்ய வேண்டும்.25.10.75

11. நாடகப்படி கலியுக உலகின் துக்கம் மற்றும் அமைதியற்ற காட்சிகளைப் பார்த்து எல்லையற்ற வைராக்கியம் உடையவர்களாகிக்கொண்டே போவீர்கள். என்ன நடந்தாலும் சரி, தான் எப்போதும் உயரும் கலையில் இருக்க வேண்டும். உலகத்திற்கு அது அய்யோ, அய்யோ ஆனால் உங்களுக்கு அது ஆஹா, ஆஹாவாக இருக்கிறது. இந்த உலகம் அவல நிலையை அடையப் போகிறது. அவலம் என்றால் முடிய வேண்டும்.. எந்தப் பிரச்சினையைக் கண்டும் பயப்படாதீர்கள். நமக்காக தயாராகிக் கொண்டிருக்கிறது. சாட்சியாக இருந்து அனைத்துவித விளையாட்டையும் பாருங்கள். சிலர் அழுகிறார்கள், சிலர் கதறுகிறார்கள், சாட்சியாக இருந்து பார்ப்பதன் மூலம் வேடிக்கையாக இருக்கும்.‘‘என்னவாகும்?’’ என்ற கேள்வியே எழுவதில்லை. இவைகள் நடந்தாக வேண்டியவைகள். அப்படி உறுதியாக இருக்கிறீர்கள் அல்லவா? ‘‘என்னவாகும்?’’ இந்த கேள்வி எழுவதில்லையே. அனேகமுறை இந்தக் குழப்பங்களை பார்த்திருக்கிறீர்கள் இப்போது மீண்டும் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். உலகில் என்ன நடந்தாலும் சரி, நினைவின் சூளையில் (பட்டியில்) இருப்பவர்கள் எப்போதும் பாதுகாப்பாக இருக்கிறார்கள். 07.12.79

12. எப்போதும் மனம், சொல் இரண்டும் ஒன்றாக சேவையில் இருக்க வேண்டும். தற்சமயத்தில் விசேசமாக பாரதவாசிகளிடம் எப்படிப்பட்ட நிலை காணப்படுகிறது? இப்போது மயான வைராக்கிய உணர்வில் இருக்கிறார்கள். இப்படி மயான வைராக்கிய உணர்வில் இருப்பவர்களுக்கு எல்லையற்ற வைராக்கிய உணர்வைக் கொடுப்பதற்கு சுயம் எல்லையற்ற வைராக்கிய உணர்வு உடையவர் ஆகுங்கள்.

தன்னைத்தானே சோதனை செய்யுங்கள். சில நேரம் விருப்பம், சில நேரம் வெறுப்பு என இரண்டிலும் நடக்கிறீர்களா அல்லது எப்போதும் எல்லையற்ற வைராக்கியம் உடையவர் ஆகிவிட்டீர்களா? எல்லையற்ற வைராக்கியம் உடையவர் என்றால் இந்த தேக வடிவ வீட்டையும் துறந்து, வீடற்றவர் ஆகிவிடவேண்டும். இந்த தேகமும் பாபாவுடையது, என்னுடையதல்ல. அந்த அளவு தேகவுணர்வை கடந்து இருக்க வேண்டும். எல்லையற்ற வைராக்கியம் உடையவர்கள் ஒருபோதும் சுபாவம், சமஸ்காரம், சாதனம் என்ற எதற்கும் வசமாக மாட்டார்கள். விலகி இருந்து, அதிகாரியாகி சாதனங்களை பயன்படுத்தி வெற்றி சொரூபமாக இருப்பார்கள், சாதனங்களை உபயோகிக்கும் விதியை உருவாக்குவார்கள். அந்த விதி மூலமாக சுயமுன்னேற்றத்தில் வளர்ச்சி அடைவார்கள். சேவையிலும் வளர்ச்சி பெறுவார்கள். சாதனங்கள் நிமித்த ஆதாரங்களாக இருக்கும், ஆனால் அவைகளுக்கு அடிமையாக மாட்டார்கள். ஆதாரங்களுக்கு அடிமையாவது என்றால் அவைகளுக்கு வசமாகிவிடுவது. வசப்படுவது என்ற வார்த்தையின்

அர்த்தமே, எப்படி பூத ஆத்மா பிரவேசமாகிவிட்டால் வாட்டி வதைத்து துன்பம் தருகிறதோ, அப்படி ஏதாவது சாதனம் அல்லது சமஸ்காரம் அல்லது சுபாவம் அல்லது நட்பிற்கு வசமாகிவிட்டால் அது பூதத்தைப்போல அதன்வசமாக்கி துன்பப்பட வைக்கிறது. எல்லையற்ற வைராக்கியம் உடையவர், **எப்போதும் 'செய்யவைப்பவர் செய்யவைக்கிறார்' என்ற போதையில் வலம்வரும் யோகியாக இருப்பதையும் கடந்து மேலே-பறக்கும் யோகியாக இருப்பார்கள்.** எப்படி எல்லைக்குட்பட்ட ஹடயோக விதிமூலம் நிலம், நெருப்பு, நீர் ஆகியவைகளுக்கு மேலே மிதக்கும் உயர்ந்த ஆசனதாரியாக காட்டுகிறார்கள். அதனை யோகத்தின் சித்தி (வெற்றி) சொரூபம் என ஏற்றுக்கொள்கிறார்கள். அது அற்பகாலத்திற்கு ஹடயோகவிதி மூலம் கிடைக்கும் சித்தி. அதேபோல எல்லையற்ற வைராக்கிய உணர்வுடையவர்கள் அதன் விதி மூலமாக தேகவுணர்வின் பூமிக்கு மேலே, மாயாவின் விதவிதமான விகாரங்களின் அக்கினிக்கு மேலே, பலவிதமான சாதனங்கள் என்ற நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படுவதற்கு மேலே இருப்பார்கள். பாய்ந்து செல்லும் தண்ணீர் எப்படி சூழ்ந்து கொள்கிறதோ, தன்னோடு இழுத்துச் செல்கிறதோ அதேபோல எந்தவித அற்பகால சாதனங்களின் கவர்ச்சி என்ற ஓட்டமும் தன்னோடு இழுத்துச் செல்லக்கூடாது. அப்படி பாய்ந்து செல்லும் நீரோட்டத்திற்கு மேலே இருப்பவரைத்தான் "பறக்கும் யோகி" எனச் சொல்லப்படுகிறது. இந்த எல்லா சித்திகளும் எல்லையற்ற வைராக்கிய விதிமூலமாக கிடைக்கப்பெறும்.

எல்லையற்ற வைராக்கியம் உடையவர் என்றால் ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் சேவையில் எல்லையற்ற உணர்வு, நினைவு, பாவனை மற்றும் விருப்பம் உடையவராக இருப்பது. ஒவ்வொரு எண்ணமும் எல்லையற்ற சேவையில் சமர்பணமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லிலும் தன்னலமற்ற உணர்வு இருக்க வேண்டும். ஒவ்வொரு செயலிலும் செய்ய வைப்பவர் செய்ய வைக்கிறார் என்ற எண்ண அலைகளை அனைவரும் அனுபவம் செய்ய வேண்டும். இப்படி இருப்பவரைத்தான் "எல்லையற்ற வைராக்கியம் உடையவர்" எனச் சொல்லப்படுகிறது. எல்லையற்ற வைராக்கியம் உடையவர் என்றால் தனது என்பது இல்லாமல் இருக்க வேண்டும். பாபாவுடையது என்பது வரவேண்டும். எப்படி இடைவிடாமல் மந்திரம் ஜெபிக்கிறார்களோ அப்படி இடைவிடா நினைவு சொரூபம் இருக்க வேண்டும். ஒவ்வொரு எண்ணத்திலும், ஒவ்வொரு சுவாசத்திலும் எல்லையற்று இருப்பதோடு பாபாவும் அதில் கலந்திருக்க வேண்டும். எனவே சாதாரண வைராகி, மயான வைராகி ஆத்மாக்களுக்கு தற்போது அமைதி மற்றும் சக்தியை கொடுப்பவராகி அவர்களை எல்லையற்ற வைராக்கியம் உடையவர் ஆக்குங்கள். 19.11.84

13. எந்த அளவு 'பண்டாரி' (உண்டியல்) நிறைவாக இருக்கிறதோ அந்த அளவு எல்லையற்ற வைராக்கிய உணர்வும் இருக்க வேண்டும். பிராப்தி மிக அதிகமாக இருக்க வேண்டும் மேலும் வைராக்கிய உணர்வும் அதே அளவு இருக்க வேண்டும், அப்போதே எல்லையற்ற வைராக்கிய உணர்வு உடையவர் என்று சொல்ல முடியும். (பிராப்தி) இல்லாதபோது அதை வைராக்கிய உணர்வு என்று எப்படி சொல்ல முடியும். எல்லாம் ,இருந்த போதிலும் வைராக்கிய உணர்வு இருந்தால் அதனை எல்லையற்ற வைராக்கிய உணர்வு என்று சொல்லமுடியும். 09.01.85

14. எப்போது மாயாவோடு கடுமையான யுத்தம் நடக்கிறதோ, அப்போது பலமுறை அற்பகால வைராக்கியமும் வருகிறது எனினும் அது எல்லைக்குட்பட்ட அற்பகால வைராக்கியமாக இருக்கிறது. எல்லையற்று சதா காலத்திற்கு இருப்பதில்லை. வேறுவழி இல்லாமல் வைராக்கிய உணர்வு தோன்றுகிறது. எனவே அந்த நேரத்தில், இப்படி இருப்பதற்கு இதை விட்டுவிடுவதே மேல் எனச் சொல்கிறீர்கள். எனக்கு வைராக்கியம் வந்துவிட்டது. சேவையும் வேண்டாம், மனிதர்களும் வேண்டாம், என வைராக்கியம் வருகிறது ஆனால் அது எல்லையற்றதாக இருப்பதில்லை. வெற்றி ரத்தினங்கள்

எப்போதும் தோல்வியிலும் வெற்றியை, வெற்றியிலும் வெற்றியை அனுபவம் செய்வார்கள். எல்லைக்குட்பட்ட வைராக்கியத்தை – ஒதுங்கிக்கொள்வது என்று சொல்லப்படுகிறது. வைராக்கியம் என்று பெயர் சொல்கிறார்கள் ஆனால் ஒதுங்கி இருக்கிறார்கள். வெற்றி வைரங்கள் எந்த செயலில் இருந்தும், பிரச்சினையிலிருந்தும், மனிதர்களிடமிருந்தும் ஒதுங்க மாட்டார்கள். எனினும் **எல்லா செயல்களை செய்தபோதும், அனைத்தையும் எதிர்கொண்டபோதும், அனைவருக்கும் உதவிசெய்தபடி எல்லையற்ற வைராக்கிய உணர்வில் இருப்பார்கள். அது சதாகாலத்திற்கு இருக்கும்.** 25.11.85

ராஜரிஷி

15. தம்மை ராஜரிஷி, சிறந்த ஆத்மா என உணர்கிறீர்களா? ராஜரிஷி , என்றால் இராஜ்ஜியம் இருக்கிறபோதும் ரிஷி, அதாவது சதா எல்லையற்ற வைராக்கியம் உடையவராக இருப்பது. ஸ்தூல தேச ராஜ்ஜியமல்ல ஆனால் சுயத்தின்மீது ராஜ்ஜியம். சுயத்தை ராஜ்ஜியம் செய்தபோதும் எல்லையற்ற வைராக்கியத்தோடு இருக்க வேண்டும், தபஸ்வியாகவும் இருக்க வேண்டும், ஏனெனில் பழைய உலகத்தில் என்னதான் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த உலகத்தை சாரமற்ற உலகம் என்று சொல்கிறீர்கள், இதில் எந்த சாரமும் இல்லை. எந்த அளவு சரி செய்ய முயற்சி செய்கிறார்களோ அந்த அளவு மோசமாகிறது. எனவே சாரமில்லை அல்லவா. எனவே சாரமற்ற உலகின்மீது வைராக்கியம் தானாகவே வருகிறது, ஏனெனில் பிராமணர்களுக்கு சாரமற்ற உலகில் இருந்து சிறந்த உலகம் கிடைத்துவிட்டது. சிறந்த உலகம் கிடைத்துவிட்டது என்றால் சாரமற்றதன்மீது வைராக்கியம் தானே பிறந்துவிடுகிறது. வைராக்கியம் என்றால் விருப்பம் இருக்கக்கூடாது. ஒருவேளை விருப்பம் இருக்குமானால் புத்தி அங்கே வளைந்து விடுகிறது. எந்தப் பக்கம் விருப்பம் இருக்கிறதோ அந்தப்பக்கம் புத்தி போகிறது. எனவே ராஜரிஷியாக இருங்கள், ராஜாவாகவும் இருங்கள், கூடவே எல்லையற்ற வைராக்கியம் உடையவராகவும் இருங்கள். தபஸ்வியாக இருக்கிறார். எவ்வித கவர்ச்சியாலும் கவரப்படாதவராக இருக்கிறார். சுய ராஜ்ஜியத்திற்கு முன்னால் இந்த எல்லைக்குட்பட்ட கவர்ச்சிகள் எல்லாம் என்ன? ஒன்றுமே கிடையாது. எனவே தன்னை என்னவாக உணர்கிறீர்கள்? ராஜரிஷி, எந்தவித விருப்பமும் ரிஷியாகவிடாது, தபஸ்வியாகவிடாது. தபஸ்யா செய்வதில் 'விருப்பம்' தான் தடைரூபம் பெற்று முன்னால் வருகிறது, அதனால் தவத்திற்கு பங்கம் விளைகிறது. எனவே, மாயாவின் கவர்ச்சியில் இருந்து எப்போதும் விலகி இருங்கள். எந்த சம்பந்தத்திலும் பற்று இருக்கக்கூடாது. 23.01.87

16. எதுவரை வாழ்கிறீர்களோ அதுவரை படிப்பு மற்றும் சம்பூரணமாவதன் மீது கவனம், எல்லையற்ற வைராக்கிய உணர்வின்மீது கவனம் கொடுக்க வேண்டும் - இதை மறந்துவிடுகிறீர்கள். பிரம்மா பாபாவைப் பார்த்தீர்களா, கடைசி சம்பூரண கர்மாதீத நிலைவரை தன்மீது, சேவையின்மீது, எல்லையற்ற வைராக்கிய உணர்வின்மீது, மாணவ வாழ்க்கையின் நியதிப்படி கவனம் கொடுத்து, நிமித்தமாக இருந்து காண்பித்தார். எனவே ஆரம்பத்தில் இருந்து கடைசிவரை தைரியமாக இருந்தார், தைரியத்தை கொடுப்பதற்கு நிமித்தமாக இருந்தார். எனவே பாபாவின் உதவிக்கு பாத்திரமாகி நம்பர்ஒன் பிராப்தியை பெற்றுவிட்டார். எதிர்காலம் உறுதிசெய்யப்பட்ட பிறகும் கவனக்குறைவாக இருக்கவில்லை. எப்போதும் தனது தீவிர முயற்சியின் அனுபவத்தை குழந்தைகள் முன்னால் கடைசிவரை சொல்லிக்கொண்டே இருந்தார். உதவியின் கடலில் அப்படி மூழ்கி இருந்தார் அதனால் இப்போதுகூட பாபாவிற்கு சமமாக ஒவ்வொரு குழந்தைக்கும், அவ்யக்த ரூபத்திலிருந்து உதவி செய்து கொண்டிருக்கிறார். இதைத்தான் தைரியத்தின் ஒரு அடிமூலம் கோடி மடங்கு உதவிக்கு பாத்திரமாவது என்று சொல்லப்படுகிறது. 22.11.87

17. ரிஷி என்றால் எல்லையற்ற வைராக்கிய உணர்வில் இருப்பவர். ஒரு பக்கம் அனைத்து பிராப்திகளின் அதிகார போதை, இன்னொறு பக்கம் எல்லையற்ற வைராக்கியத்தின் அலௌகீக

போதை. எந்த அளவு சிறந்த பாக்கியமோ அந்த அளவு சிறந்த தியாகம். இரண்டும் சமமாக இருக்க வேண்டும், இப்படி இருப்பவரைத்தான் ராஜரிஷி என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ராஜரிஷி குழந்தைகளின் சமநிலையை பார்த்துக்கொண்டிருந்தார். இப்போதே அதிகாரியாக இருப்பதன் போதை மேலும் இப்போதே வைராக்கிய உணர்வின் போதை - இந்த பயிற்சியில் எதுவரை நிலையாக இருக்க முடிகிறது, அதாவது இரண்டு நிலைகளையும் சம அளவில்செய்யும் பயிற்சி எதுவரை செய்கிறீர்கள் - என்பதை சோதனை செய்து கொண்டிருந்ததார். எல்லா குழந்தைகளும் வரிசைப்படி பயிற்சி செய்பவர்களாக இருக்கிறீர்கள். எனினும் நேரத்திற்குத் தக்கபடி இந்த இரண்டு பயிற்சிகளையும் இன்னும் நிறைய அதிகரித்துக்கொண்டே செல்லுங்கள். **எல்லையற்ற வைராக்கிய உணர்வின் அர்த்தம் என்னவென்றால் - வைராக்கியம் என்றால் விலகிப்போவதல்ல, ஆனால் அனைத்துப் பிராப்திகளும் இருந்தபோதிலும் எல்லைக்குட்பட்ட கவர்ச்சி, மனதையோ அல்லது புத்தியையோ தன்பக்கம் இழுக்கக்கூடாது. எல்லையற்றவர் என்றால் எல்லையற்ற வகையில் முழுமைபெற்ற (சம்பூரண) நிறைந்த (சம்பன்ன) ஆத்ம**ா, பாபாவிற்குச் சமமாக எப்போதும் அனைத்து கர்மேந்திரியங்களுக்கும் இராஜ்ஜிய அதிகாரியாக இருப்பவர். இந்த சூட்சும சக்திகளான மனம்-புத்தி-சமஸ்காரத்திற்கும் அதிகாரியாக இருப்பவர். எண்ண அளவில்கூட அடிமைத்தனம் இருக்கக்கூடாது. இப்படி இருப்பவரைத்தான் ராஜரிஷி, அதாவது எல்லையற்ற வைராக்கிய உணர்வு உடையவர் என்று சொல்லப்படுகிறது. இந்த **பழைய தேகம் அல்லது தேகத்தின் பழைய உலகம் அல்லது உலகீய உணர்வு, வசதி வாய்ப்புகளின் உணர்வு - இந்த எல்லா கவர்ச்சியில் இருந்தும் எப்போதும் எளிதாகவும் தூர இருக்கக்கூடியவர்.**

எனவே ராஜரிஷி என்றால் அனைத்திற்கும் ராஜ்ஜிய அதிகாரி. எப்போது ரிஷி அதாவது எல்லையற்ற வைராக்கிய உணர்வை பயிற்சி செய்பவராக இருக்கிறீர்களோ அப்போதே எப்போதும், எளிதாகவும் ராஜ்ஜிய அதிகாரியாக இருக்க முடியும். **வைராக்கியம் என்றால் ஆசையின்றி இருப்பது. எப்போதும் பாபாவுடைய அன்பில் இருப்பது.** இந்த அன்புதான் விலகியிருக்க வைக்கிறது. பாபாவிற்கு பிரியமானவராகி,பற்றற்றவராகி செயலுக்கு வரவேண்டும் - இப்படி இருப்பவரையே எல்லையற்ற வைராக்கியம் உடையவர் என்று சொல்லப்படுகிறது. பாபாவிடம் அன்பில்லை என்றால் விலகி இருக்கவும் முடியாது, பற்று வந்துவிடும். பாபாவிற்கு பிரியமானவர்கள் வேறு எந்த மனிதர்கள் அல்லது வசதி வாய்ப்புகளுக்கு பிரியமானவர் ஆகமுடியாது. அவர்கள் எப்போதும் கவர்ச்சியை கடந்த நிலையில் அதாவது விலகி இருப்பார்கள். இந்த நிலையைதான் எதிலும் **ஒட்டாத (நிர்லேப்) நிலை** என்று சொல்லப்படுகிறது. எந்தவொரு எல்லைக்குட்பட்ட கவர்ச்சிக்கும் வசமாகாதவர்கள், படைப்பு மற்றும் சாதனங்களை பட்டும் படாத நிலையில் இருந்து செயலில் ஈடுபடுத்துவார்கள். அப்படிப்பட்ட எல்லையற்ற வைராக்கியம் உடையவராக, உண்மையான ராஜரிஷியாக மாறிவிட்டீர்களா? ஒன்று அல்லது இரண்டு பலவீனங்கள் மட்டுமே மிச்சமிருக்கிறது, ஒரேயொரு சூட்சும சக்தி அல்லது கர்மேந்திரியம் மட்டும்தான் கொஞ்சம் கட்டுப்பாட்டில் இல்லை, மற்ற எல்லாம் சரியாக இருக்கிறது என நினைக்காதீர்கள். ஆனால் எங்கே ஒரு பலவீனமாவது இருக்கிறதோ, அது மாயாவின் கதவாக இருக்கிறது. கதவு சிறியதாக இருக்கலாம் அல்லது பெரியதாக இருக்கலாம் எனினும் கதவு, கதவுதானே. ஒருவேளை கதவு திறந்திருந்தால் மாயையை வென்று உலகை வென்றவராக எப்படி ஆவீர்கள்?

ஒரு பக்கம் ஒரு ராஜ்ஜியம், ஒரு தர்மத்தின் தங்கமயமான உலகம் அழைத்துக் கொண்டிருக்கிறது கூடவே பலவீனம் அதாவது மாயாவும் அழைத்துக் கொண்டிருக்கிறது என்றால் முடிவு என்னவாகும்? குழப்பத்தில் இருந்து விடுவீர்கள். எனவே இதை சிறிய விசயமாக நினைக்காதீர்கள். நேரம் இருக்கிறது, செய்துவிடுவோம், மற்றவரிடத்தில் எத்தனையோ இருக்கிறது, என்னிடம் ஒரு விசயம் மட்டும்தானே இருக்கிறது என மற்றவர்களைப் பார்த்துப் பார்த்து தான் நின்றுவிடாதீர்கள். ‘‘பிரம்மா பாபாவைப் பாருங்கள்’’ என்று

சொலப்பட்டிருக்கிறது, தந்தையை பின்பற்றுங்கள் என்று சொல்லப்பட்டிருக் கிறது .அனைவருக்கும் உதவி செய்பவராக, நண்பராக அவசியம் இருங்கள், குணங்களை கிரகிப்பவராக கட்டாயம் இருங்கள் எனினும் தந்தையைப் பின்பற்றுங்கள். பிரம்மா பாபாவின் கடைசி நிலையான ராஜரிஷி நிலையைப் பார்த்தீர்கள், குழந்தைகளிடம் அவ்வளவு பிரியமாக இருந்தபோதும், எதிரே பார்த்தபோதும் விலகியிருப்பதைப் பார்த்தீர்கள் அல்லவா. எல்லையற்ற வைராக்கியம் - என்ற நிலையை நடைமுறையில் பார்த்தீர்கள். கர்ம சுமை (வியாதி) இருந்தபோதும் கர்மேந்திரியங்கள்மீது அதிகாரியாகி, அதாவது சம்பூரண நிலையின் அனுபவம் செய்ய வைத்தார். எனவே தான் ''பாலோபாதர்'' (தந்தையைப் பின்பற்றுங்கள்) என்று சொல்லப்படுகிறது. எனவே தனது ராஜிய அதிகாரிகளையும், அரசில் வேலை செய்பவர்களையும் எப்போதும் பாருங்கள். அரச வேலை செய்யக்கூடிய எவரும் எங்கும் ஏமாற்றவில்லையா எனப் பாருங்கள். புரிந்ததா? 27.11.87

18. எப்போதும் தன் ராஜரிஷி என உணர்நதிருக்கிறீர்களா? ஒருபுறம் ராஜ்ஜியம், மறுபுறம் வைராக்கியம் - இரண்டும் சமமாக இருக்க வேண்டும். வெறும் வைராக்கியமல்ல ,எல்லையற்ற வைராக்கியம் இருக்க வேண்டும். அது பிராப்தி சொரூபமாக்குகிறது, ஏனெனில் பழைய உலகின்மீது வைராக்கியத்தை கொண்டுவருகிறீர்கள், மேலும் புதிய உலகத்திற்கு அதிபதியாகிவிடுகிறீர்கள். எனவே **பெயர் வைராக்கியம் ஆனால் கிடைப்பது பிராப்தி**. **விடுவதிலேதான் பெறுவது இருக்கிறது**. ஒன்றை விடுகிறீர்கள் ஆனால் கோடி பெறுகிறீர்கள். எனவே எல்லையற்ற வைராக்கியம் ராஜ பாக்கியத்தை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. ஒரு ஜன்மத்திற்கு வைராக்கியம், அனேக ஜன்மத்திற்கு சதா சிறந்த பாக்கியம். அப்படிப்பட்ட ராஜரிஷிகளாக இருக்கிறீர்களா? ராஜரிஷி குமார் மற்றும் குமாரிகளுக்குத்தான் புகழ் இருக்கிறது. அப்படிப்பட்ட ராஜரிஷி ஆத்மாக்களுக்கு, உலகத்தின் ஆத்மாக்கள் உளமாற அன்பு காட்டுகிறார்கள். உயிருள்ள உங்களைக் காட்டிலும் உங்கள் ஜட சித்திரங்களை அதிக அன்போடு நினைவு செய்கிறார்கள். ஏனென்றால் தியாகத்தின் பாக்கியம் கிடைத்திருக்கிறது. எனவே அப்படிப்பட்ட ராஜரிஷி ஆத்மாக்களாக இருக்கிறோம் என்ற போதையில் எப்போதும் இருங்கள். 27.12.87

19. இப்போது நேரத்தைக் கொஞ்சம் முன்னே போகவிடுங்கள். கொஞ்ச நேரத்தில் எப்போது உச்சம் மற்றும் இறுதி- இரண்டும் அனுபவமாகிறதோ அப்போது நாலாபுறமும் உள்ள அஞ்ஞான ஆத்மாக்களிடம் எல்லைக்குட்பட்ட வைராக்கிய உணர்வு தோன்றும், மற்றும் பாக்கியவான் ஆத்மாக்களாகிய நீங்கள் எல்லையற்ற வைராக்கிய உணர்வின் அனுபவத்தில் இருப்பீர்கள். இப்போது உலகில் உள்ளவரிடத்திலேயே இன்னும் வைராக்கியம் வரவில்லை. ஒருவேளை சிறிய பெரிய ஒத்திகை நடந்ததென்றாலும் ,இவைகள் எப்போதும் நடந்துகொண்டுதானே இருக்கிறது என்ற சோம்பலின் உறக்கத்தில் தூங்கிவிடுகிறார்கள். எனினும் எப்போது ''உச்சம் மற்றும் இறுதி'' கண்முன்னே வருகிறதோ அப்போது தானாகவே எல்லைக்குட்பட்ட வைராக்கிய உணர்வு தோன்றும் மேலும் அதிகபட்ச 'டென்சன்' இருக்கக்கூடிய காரணத்தால் அனைவரின் அட்டென்சன் (கவனம்) ஒரு பாபாவின் பக்கம் போகும். அப்போது அனைத்து ஆத்மாக்களின் உள்ளத்தில் இருந்து அனைவரையும் படைப்பவர், அனைவருக்கும் தந்தை ஒருவரே என்ற சப்தம் வெளிப்படும் மேலும் புத்தி அனேக பக்கங்களில் இருந்தும் விலகி ஒருபக்கம் தானாகவே போகும். அப்படிப்பட்ட நேரத்தில் பாக்கியவான் ஆத்மாக்கள் நீங்கள் எல்லையற்ற வைராக்கிய உணர்வு நிலையில் இயல்பாகவும் நிரந்தரமாகவும் இருப்பதோடு ஒவ்வொருவருடைய நெற்றியிலும் பாக்கியத்தின் ரேகைகள் தெளிவாகத் தென்படும். இப்போதுகூட சிறந்த பாக்கியவான் குழந்தைகளின் புத்தியில் எப்போதும் இருப்பது என்ன? ''பாக்கியவான்'' மற்றும் ''பாக்கியம்''. 07.03.88

20. சுய முன்னேற்றம் பெறுவதற்காக, எப்போது சுயத்தின் மீது இரக்கப்படுகிறீர்களோ அப்போது இரக்கமுள்ள ஆத்மாவிடம் சதா எல்லையற்ற வைராக்கிய உணர்வு தாமாகவே வந்துவிடும். நான் எவ்வளவு உயர்ந்த தந்தையின் அதே ஆத்மா,மேலும் அதே பாப்சமான் ஆகக்கூடிய இலட்சியமுடையவன் என சுயத்தின்மீது இரக்கம் கொள்ளுங்கள். அதன்படி உண்மையான சிறந்த சுபாவம் அல்லது சமஸ்காரத்தில் ஒருவேளை ஏதாவது குறை இருந்தால், தன்மீது காட்டும் உள்ளத்தின் கருணை, அந்த குறைகள்மீது வைராக்கியத்தை கொண்டு வந்துவிடும். 31.03.90

**21. எப்போதும் எளிதாகவும் தவம் (தபஸ்யா) செய்வதற்கு அடித்தளமாக இருப்பது "எல்லையற்ற வைராக்கியம்".** எல்லையற்ற வைராக்கியம் என்றால் நாலாபுறமும் உள்ள கரைகளை விட்டுவிடுவது. ஏனென்றால் கரையை நீங்கள் ஆதாரமாக வைத்திருக்கிறீர்கள். நேரத்திற்குத் தக்கபடி பிரியமானவர் (பியாரா)ஆக வேண்டும் பிறகு நேரத்திற்குத் தக்கபடி நிமித்தமாக இருக்கும் ஆத்மாக்களின் சைகையின்படி நொடியில் புத்தியானது பிரியமாவதில் இருந்து விலகி வரவேண்டும(நியாரா), அப்படி நடக்க மறுக்கிறது. எவ்வளவு விரைவில் பிரியப்படுகிறீர்களோ அவ்வளவு விரைவில் விலகிவருவதில்லை. பிரியமாவதில் கெட்டிக்காரர்களாக இருக்கிறீர்கள், விலகிவருவதற்கு யோசிக்கிறீர்கள், தைரியம் இருக்க வேண்டும். விலகி வருவதுதான் கரைகளை விடுவதாகும் மேலும் கரைகளை விடுவதே எல்லையற்ற வைராக்கிய உணர்வாகும். கரைகளை ஆதாரமாக்கி பிடித்துக்கொள்ள வருகிறது ஆனால் விட வேண்டும் என்றால் என்ன செய்கிறீர்கள்? பெரிய கேள்விக்குறியை போட்டுவிடுகிறீர்கள். சேவையின் பொறுப்பேற்க மிக நன்றாக வருகிறது ஆனால் அந்த பொறுப்போடு கூடவே சுயத்தினுடைய, மற்றவருடைய பேட்டரியை சார்ஜ் செய்வது கடினமாக இருக்கிறது. எனவே தற்சமயத்தில் தவத்தின் மூலமாக வைராக்கிய உணர்வைக் கொண்டுவருவது மிகவும் அவசியமாக இருக்கிறது.

நீங்கள் மிகப் பெரிய பாக்கியசாலிகளாக இருக்கிறீர்கள். அனேகவித சிரமங்களில் இருந்து விலகி வந்துவிட்டீர்கள். உலகில் உள்ளவர்களை நேரம் செய்ய வைக்கும் மேலும் நேரத்தின்படி வேறுவழியின்றி கட்டாயத்தில் செய்வார்கள். குழந்தைகளை பாபா நேரத்திற்கு முன்னதாகவே தயாராக்குகிறார் மேலும் பாபாமீது உள்ள அன்பால் செய்கிறீர்கள். ஒருவேளை அன்பால் செய்யாமல் அல்லது குறைவாக செய்தால் என்னவாகும்? வேறு வழியின்றி செய்தேயாக வேண்டியிருக்கும். எல்லையற்ற வைராக்கியத்தை கடைப்பிடித்தே தீரவேண்டியிருக்கும் எனினும் கட்டாயத்தின் பேரில் செய்யக்கூடிய காரணத்தால் பலன் கிடைக்காது. அன்பால் செய்வது வெளிப்படையான பலனாகவும், எதிர்கால பலனாகவும் ஆகிவிடுகிறது மேலும் கட்டாயத்தின் பேரில் செய்பவருக்கு எங்கிருந்து கிராஸ் செய்ய (கடந்து செல்ல) வேண்டியிருக்கும்! அதை கிராஸ் செய்வது கூட கிராஸில் ஏறுவதற்குச் (சிலுவையில் அறைவதற்கு) சமமாக இருக்கும். என்ன அது பிடித்திருக்கிறதா? 13.12.90

22. தன்னை ராஜரிஷியாக உணர்கிறீர்களா? ராஜாவாகவும், ராஜரிஷியாகவும் இருப்பது. சுயராஜ்ஜியம் கிடைத்திருப்பதால் ராஜாவாக இருக்கிறீர்கள் மேலும் கூடவே பழைய உலகத்தின் ஞானம் கிடைத்திருப்பதால், பழைய உலகின்மீது எல்லையற்ற வைராக்கியம் உடையவராக இருக்கிறீர்கள் எனவே ரிஷியாகவும் இருக்கிறீர்கள். ஒரு பக்கம் ராஜ்ஜியம் இன்னொரு பக்கம் என்றால் எல்லையற்ற வைராக்கியம். எனவே இரண்டும் இருக்கிறதா? எல்லையற்ற வைராக்கியம் இருக்கிறதா அல்லது கொஞ்சம் கொஞ்சம் விருப்பமும் இருக்கிறதா?. விருப்பம் எங்கிருந்தாலும், அது தன்மீதிருந்தாலும், மனிதர்கள்மேல் இருந்தாலும், பொருட்கள்மேல் இருந்தாலும், பற்று (விருப்பம்) எங்கிருந்தாலும் ரிஷியாக இருக்க விடாது. அப்போது ராஜாவும் இல்லை, ரிஷியும் இல்லை. ஏனெனில் சுயராஜ்ஜியம் இருக்குமானால் மனம்-புத்தி-சமஸ்காரம் எல்லாம் தன்வசத்தில் இருக்கும்.

விருப்பம் (பற்று) வரமுடியாது. ஒருவேளை எங்காவது எண்ண அளவிலும் கொஞ்சமாவது ஆசை இருக்குமானால் ரிஷி என்று சொல்லமாட்டார்கள். ஒருவேளை விருப்பம் இருக்கிறது என்றால் இரண்டு படகிலும் கால் வைத்திருக்கிறீர்கள் இல்லையா. கொஞ்சம் பழைய உலகில், கொஞ்சம் புது உலகில். எனவே ஒரு பாபாவைத் தவிர வேறு யாருமில்லை என இருக்க வேண்டும். ஏனெனில் இரண்டு படகிலும் கால் வைப்பவர்கள் என்ன ஆவார்கள்? இங்கும் இருக்க மாட்டார்கள், அங்கும் இருக்க மாட்டார்கள். எனவே ராஜரிஷி.ராஜா ஆகுங்கள் மேலும் எல்லையற்ற வைராக்கியம் உடையவராகவும் ஆகுங்கள். 02.12.93

23. ஆத்மாக்களின் தொடர்பில் வருகிறீர்கள், சாதனங்களின் தொடர்பில் வருகிறீர்கள், சேவையின் வாய்ப்பைப்பெற்று வேந்தராவதற்கான பாக்கியமும் கிடைக்கிறது எனினும் அனைவரது சம்பந்தம் தொடர்பில் எவ்வளவு விலகி இருக்கிறீர்களோ அவ்வளவு அன்பாகவும் இருக்க வேண்டும், அதன் சமநிலையை பராமரிக்க வேண்டும் அதுதான் யதார்த்த வைராக்கிய உணர்வின் சரியான அர்த்தம். ஆனால் என்ன நடக்கிறது? சில நேரம் விலகி இருக்கும் சதவீதம் அதிகமாகிறது, சிலநேரம் அன்பாக இருக்கும் சதவீதம் அதிகமாகிறது. நிமித்த உணர்வோடும், பணிவோடும் இருப்பதே அன்பாக இருப்பதன் அர்த்தமாகும். ஆனால் அதற்குப் பதிலாக இதை நான் தான் செய்தேன், இது என்னுடைய இடம், பாக்கியத்தின்படி அனைத்து சாதனங்களும் எனக்கே கிடைத்திருக்கிறது, என்னுடைய அயராத உழைப்பால் நான் இந்த சாதனங்களை, இடத்தை அல்லது சேவையை அல்லது சேவையின் துணைவர்களை (மாணவர்களும் துணைவர்களே) உருவாக்கி இருக்கிறேன். இவைகள் எல்லாம் என்னுடையவைகள், என்ன என்னுடைய உழைப்பிற்கு எந்த மதிப்பும் இல்லையா? என தான் என்ற உணர்வு வந்துவிடுகிறது. நிமித்த உணர்வு மற்றும் என்னுடையது என்ற உணர்வு என்ற இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறதா அல்லது இரண்டும் ஒன்றுதானா? இந்த நான் என்ற உணர்வு ராயல் உருவில் அதிகரித்துவிட்டது. இவைகள் எனது என்பதன் ராயல் பாஷையாக இருக்கிறது. ராயல் எண்ணங்களை பாபாவோடு உரையாடும்போது பாப்தாதா நிறைய கேட்கிறார்கள். பாபா நீங்கள்தான் எனக்கு இதற்கு உதவி செய்ய வேண்டும், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் - இது என்னுடைய வேலை இல்லையா, என்னுடைய பொறுப்பில்லையா, எனது அதிகாரம் எனக்கு கிடைக்க வேண்டும் என பாபாவிடம் அல்லது நிமித்த ஆத்மாவிடம் மிகுந்த அன்போடு சொல்கிறீர்கள். பாபாவிற்கே ஞானம் கொடுக்குமளவு பெரிய அறிவாளியாகிவிடுகிறீர்கள். அந்தநேரம் பாப்தாதா புன்னகையோடு பார்த்துக்கொண்டிருக்கிறார். எது கிடைக்கிறதோ, எப்படி கிடைக்கிறதோ, எங்கே உட்கார வைக்கப்படுகிறீர்களோ, எது சாப்பிட கொடுக்கப்படுகிறதோ, எதைச் செய்யச் சொல்லப்படுகிறதோ அதைச் செய்பவர்களே நிமித்தமானவர்கள். இதுவே எல்லோருடைய முதலாவது வாக்குறுதியாக இருக்கிறது.வாக்குறுதிதானே? இந்த வாக்கு இருக்கிறதா அல்லது வெறுமனே உண்டு களிப்பதற்காக மட்டுமா? என்னுடையது என்பதன்மீது வரும் வைராக்கியமே எல்லையற்ற வைராக்கியமாக இருக்கிறது. புதுப்புது விதமாக என்னுடையது என்பது உருவாகிக்கொண்டே இருக்கிறது. தற்காலத்தில் மாயா புதுப்புது விதத்தில் என்னுடையது என்ற நிழலை விழச்செய்கிறது. எனவே நேரம் நெருங்கி வந்துகொண்டிருப்பது தெளிவாகத் தெரியாமல் இருக்கிறது. ஞானியாக இருந்தாலும், அஞ்ஞானியாக இருந்தாலும் இந்த உலகத்தின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது, இந்த உலகம் எதுவரை போகும், எப்படி போகும் என இருவரும் அறிந்திருப்பதோடு சொல்லவும் செய்கிறார்கள். எனினும் இந்த உலகம் இன்னும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. எல்லையற்ற வைராக்கிய உணர்வே நேரத்தை அருகில் கொண்டு வருவதற்கான அஸ்திவாரமாகும். எல்லையற்ற வைராக்கிய உணர்விற்குப் பதிலாக புதுப்புது விதமான சின்னச் சின்ன ஆசைகள் வளர்ந்து பெருகிவருவதை பாப்தாதா கண்டறிந்தார். இந்தப் பெருக்கம் சாரத்தை மறைத்து விட்டது. புரிந்ததா? இப்போது என்ன செய்யவேண்டும்?

எல்லையற்ற வைராக்கிய உணர்வின் வாயுமண்டலத்தை உருவாக்குங்கள். எப்படி சேவைக்கான வாயுமண்டலத்தை உருவாக்குகிறீர்களோ, நிகழ்ச்சிகளை உருவாக்குகறீர்களோ அப்படி. **புத்திவரை மட்டும் இந்த உணர்வு வரக்கூடாது, அது இதயம்வரை சென்று சேரவேண்டும்.** ஆக வேண்டும், செய்ய வேண்டும் என்பது எல்லோருடைய புத்தியிலும் இருக்கவே செய்கிறது, ஆனால் உள்ளத்தில் இந்த அலை உற்பத்தியாக வேண்டும் என்பது அவசியமாக இருக்கிறது. புரிந்ததா? 05.12.94

24. எல்லையற்ற வைராக்கிய உணர்வைக் குறித்து தனக்குள் சிந்தனை செய்யுங்கள், தங்களுக்குள் விவாதம் செய்யுங்கள் மேலும் நடைமுறையில் இந்த சாதனையின் விதையை வெளிப்படுத்துங்கள் என உங்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. அதைச்செய்தீர்களா? ஒருநாள் மட்டும் விவாதம் செய்தீர்கள், ஒர்க்ஷ¡ப்பும் நடந்து விட்டது ஆனால் நடைமுறையில் வரவில்லை. எனவே தற்சமயத்திற்கேற்ப இப்போது தனது சேவை மற்றும் சேவை நிலையங்களின் தினசரி நடவடிக்கைகளை எல்லையற்ற வைராக்கிய உணர்வு உடையதாக்குங்கள்.

இப்போது ஏதாவது புதுமையைக் காட்டுங்கள். புதுவருடமோ ஆரம்பமாகி விட்டது. பாப்தாதாவிற்கு ஆரம்ப காலத்தின் எல்லையற்ற வைராக்கியம் எப்போதும் நினைவிற்கு வருகிறது. அந்த நேரத்தின் பலனாகவே நீங்கள் எல்லோரும் இங்கு இருக்கிறீர்கள். ஒருவேளை எல்லையற்ற வைராக்கிய உணர்வு இல்லாமல் இருந்திருக்குமானால் ஸ்தாபனையின் வளர்ச்சி இவ்வளவு இருந்திருக்காது. பிரம்மா பாபா அவர்கள் கடைசிவரை வயது அதிகமாக இருந்தபோதும், உடலின் கணக்கு வழக்குகளை தீர்த்து வந்தபோதும், எல்லையற்ற வைராக்கிய நிலையை தெளிவாகத் தெரியச் செய்தார். சாதனங்களை தனக்காக ஏற்றுக்கொள்ளவில்லை. சேவைக்காக ஏற்றுக்கொண்டது வேறு விசயம். தனக்காக ஏற்றுக்கொள்வதற்கும், சேவைக் காரியத்தில் ஈடுபடுத்துவதற்கும், இடையே உள்ள வித்தியாசத்தை அறிந்திருக்கிறீர்கள் இல்லையா? தனக்காக எல்லையற்ற வைராக்கியத்தில் இருந்துகொண்டு சேவைக்காக சாதனங்களை காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். ஆனால் சாதனங்கள் சோம்பேறித்தனத்தை கொண்டுவரக்கூடாது. எனவே இதில் தந்தையைப் பின்பற்ற வேண்டும் அதை வரப்போகிறவர்கள் செய்ய வேண்டுமா? நீங்கள்தான் செய்ய வேண்டும். 26.01.95

25. நரம் நெருக்கத்தில் இருக்கிறது எனவே நேரம் நெருங்கிவருவதற்குத் தக்கபடி இப்போது எந்த அலை வீசவேண்டும்? (வைராக்கியம்) எந்த வைராக்கியம்-எல்லைக்குட்பட்டதா அல்லது எல்லையற்றதா? எந்த அளவு சேவையின்மீது ஊக்க உற்சாகம் இருக்கிறதோ, அந்த அளவு நேரத்தின் அவசியத்திற்குத் தக்கபடி சுய நிலையில் எந்த அளவு எல்லையற்ற வைராக்கியம் இருக்கிறது? ஏனெனில் உங்கள் சேவையின் வெற்றியால் வெகு விரைவில் பிரஜைகள் தயாராகிவிடுவார்கள். எனவே சேவை செய்கிறீர்கள் இல்லையா? எனவே எதுவரை நிமித்தமாகவுள்ள உங்களிடம் எல்லையற்ற வைராக்கிய உணர்வு வரவில்லையோ, அதுவரை மற்ற ஆத்மாக்களிடமும் வைராக்கிய உணர்வு வரமுடியாது மேலும் எப்போது வைராக்கிய உணர்வு இருப்பதில்லையோ அப்போது பாபாவின் அறிமுகம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று நீங்கள் விருப்பப்படுகிறீர்கள் அல்லவா அது கிடைக்காது. எல்லையற்ற வைராக்கியம் என்பது நிரந்தரமான வைராக்கியம். ஒருவேளை நேரத்திற்குத் தக்கபடி அல்லது சூழ்நிலைக்குத் தக்கபடி வைராக்கியம் வந்ததென்றால் அப்போது நேரம் ஒன்றாம் எண்ணாகி விடுகிறது நீங்கள் இரண்டாம் எண்ணாகிவிடுகிறீர்கள். பிரச்சினைகள் அல்லது நேரம் வைராக்கியத்தை தருகிறது. பிரச்சினை முடிந்துவிட்டது, காலம் கடந்துவிட்டது என்றால் வைராக்கியமும் போய்விடுகிறது. அப்படி இருந்தால் அதை என்னவென்று சொல்வீர்கள் - எல்லையற்ற வைராக்கியமா அல்லது எல்லைக்குட்பட்டதா? எனவே இப்போது எல்லையற்ற வைராக்கியம் இருக்க வேண்டும். ஒருவேளை வைராக்கியம் இடையிடையே முறிந்து

போய்விடுகிறது என்றால் அதற்கான முக்கிய காரணம் - தேக உணர்வு. எதுவரை தேக உணர்வின்மீது வைராக்கியம் வரவில்லையோ அதுவரை எந்தவொரு விசயத்தின்மீதான வைராக்கியமும் நிரந்தரமாக இருக்காது, அற்பகாலத்திற்கு மட்டுமே இருக்கும். சம்பந்தத்தின்மீது வைராக்கியம் - இது ஒன்றும் பெரிய விசயமில்லை, உலகத்தில்கூட பலருக்கு உள்ளத்தில் வைராக்கியம் வந்துவிடுகிறது ஆனால் இங்கே தேக உணர்வின் விதவிதமான உருவங்கள் இருக்கிறதல்லவா, அந்த விதவிதமான உருவங்களை நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? எத்தனை தேக உணர்வின் உருவங்கள், அதன் விவரத்தை அறிந்திருக்கிறீர்கள் ஆனால் அந்த அனேக தேக உணர்வின் உருவங்களை எல்லாம் அறிந்து, எல்லையற்ற வைராக்கிய உணர்வில் இருக்க வேண்டும். தேக உணர்வு, ஆத்ம உணர்வாக மாறிவிட வேண்டும். தேக உணர்வு எப்படி இயற்கையாக இருக்கிறதோ அப்படி ஆத்ம உணர்வு இயற்கையாக இருக்க வேண்டும் ஏனெனில் ஒவ்வொரு விசயத்திலும் முதலாவது வார்த்தையாக வருவது தேகமே. சம்பந்தமாக இருந்தாலும் அது தேகத்தின் சம்பந்தமாகவே இருக்கிறது, பொருட்களாக இருந்தாலும் அது தேகத்தின் பொருட்களாகவே இருக்கிறது. எனவே மூலாதாரமாக இருப்பது தேக உணர்வு. எதுவரை ஏதாவது உருவத்தில் தேக உணர்வு இருக்கிறதோ அப்போது வைராக்கிய உணர்வு வர முடியாது. தற்சமயத்தில் எது தேக உணர்வைத்தரும் தடையாக இருக்கிறதோ அதற்குக் காரணமாக இருப்பது தேகத்தின் பழைய சமஸ்காரங்கள், அதன்மீது வைராக்கியம் கொள்ளவில்லை என்பதை பாப்தாதா பார்த்தார். முதலில் தேகத்தின் பழைய சமஸ்காரங்களின்மீது வைராக்கியம் வரவேண்டும். சமஸ்காரங்கள் மனோநிலையை கீழே கொண்டுவருகிறது. சமஸ்காரத்தின் காரணத்தால் சேவையில் அல்லது சம்பந்தம்-தொடர்பில் தடைகள் உண்டாகிறது. எனவே பழைய சமஸ்காரத்தின்மீது எதுவரை வைராக்கியம் வரவில்லையோ, அதுவரை எல்லையற்ற வைராக்கியம் நிரந்தரமாக இருப்பதில்லை என்பதை ரிசல்டில் பார்த்தார். சமஸ்காரம் விதவிதமான உருவத்தில் தன்பக்கம் கவர்ந்து இழுத்துவிடுகிறது. எனவே எங்கு எந்தப்பக்கமாவது கவர்ச்சி இருக்கிறதோ, அங்கே வைராக்கியம் இருக்க முடியாது. எனவே நான் எனது பழைய அல்லது வீணான சமஸ்காரத்தில் இருந்து விடுபட்டுவிட்டேனா என கண்டறியுங்கள். எவ்வளவோ முயற்சி செய்கிறீர்கள், வைராக்கிய உணர்வில் இருக்கவும் செய்கிறீர்கள் எனினும் சமஸ்காரம் சிலரிடம் அல்லது பெரும்பாலோரிடம் ஏதாவது உருவத்தில் பிரபலமாக இருந்து விடுகிறது, அது தன்பக்கம் கவாந்து இழுத்துவிடுகிறது. எனவே பழைய சமஸ்காரத்தின்மீது வைராக்கியம் கொள்ள வேண்டும். விரும்பாதபோதும் சமஸ்காரம் வெளிப்படுவது ஏன்? விருப்பப்படவில்லை எனினும் சூட்சுமத்தில் சமஸ்காரத்தை சாம்பலாக்கவில்லை. எங்காவது ஏதேனும் இம்மியளவு மிச்சமிருந்துவிடுகிறது, ஒளிந்திருக்கிறது, அது குறித்த நேரத்தில் விரும்பாதபோதிலும் வெளிவந்துவிடுகிறது. பிறகு என்ன சொல்கிறீர்கள் - நான் விரும்பவில்லை எனினும் நடந்துவிட்டது, நடந்துவிடுகிறது … என்ன செய்வது எனச் சொல்கிறீர்கள், இதைச் சொல்வது யார் - தேக அபிமானமா அல்லது ஆத்ம அபிமானமா?

சமஸ்காரங்கள் மீதான வைராக்கிய உணர்வில் பலவீனம் இருப்பதை பாப்தாதா அவர்கள் பார்த்தார்கள். அழித்துவிட்டீர்கள் எனினும் இம்மிகூட மிச்சமிருக்கக்கூடாது, அப்படி அழிக்கவில்லை எனவே எங்கே அம்சம் (இம்மி) இருக்கிறதோ அங்கே வம்சம் வந்தே தீரும். இன்று அம்ச அளவே இருக்கிறது, நேரம் வரும்போது வம்சத்தின் உருவத்தைப் பெற்றுவிடுகிறது. புறவசமாக்கிவிடுகிறது. சொல்லும்போது எல்லோரும் என்ன சொல்கிறீர்கள் - பாபா எப்படி ஞானம் நிறைந்தவராக இருக்கிறாரோ அப்படி தானும் ஞானத்தால் நிறைந்து இருக்கிறேன் என்று சொல்கிறீர்கள், ஆனால் எப்போது சமஸ்காரம் சண்டை போடுகிறதோ அப்போது ஞானம் நிறைந்து (knowledgefull) இருக்கிறீர்களா அல்லது ஞானத்தை இழுத்து (knowledge pull)வைத்திருக்கிறீர்களா?என்ன நடக்கிறது? ஞானம் நிறைந்தவராக இருப்பதற்குப் பதிலாக ஞானத்தை இழுப்பவராகி விடுகிறீர்கள். அந்த நேரத்தில்

யாரிடத்தில் கேட்டாலும் - ஆமாம், நடக்கக்கூடாது, செய்யக்கூடாது என்பது எனக்கும் தெரியும் ஆனால் நடந்து விடுகிறது என்று சொல்கிறார்கள். என்றால் ஞானம் நிறைந்தவராக இருக்கிறீர்களா அல்லது ஞானத்தை இழுப்பராக இருக்கிறீர்களா? யார் ஞானம் நிறைந்தவராக இருக்கிறாரோ அவரிடம் எந்தவித சமஸ்காரமோ, சம்பந்தமோ, பொருளோ யுத்தம் செய்ய முடியாது.

இப்போது பாபா எந்த நேரத்தைக் கொடுத்திருக்கிறாரோ, அதில் வைராக்கிய உணர்வை கொண்டுவாருங்கள் ஏனெனில் சேவையின் இழுபறியில் வைராக்கிய உணர்வு இல்லாமல் போய்விடுகிறது. சேவையில் சந்தோஷம் கிடைக்கிறது, சக்தியும் கிடைக்கிறது மேலும் பிரத்தியட்ச பலனும் கிடைக்கிறது ஆனால் சேவையில்தான் எல்லையற்ற வைராக்கிய உணர்வின் அழிவும் ஏற்படுகிறது. எனவே இப்போது தனக்குள் இந்த வைராக்கிய உணர்வை விழிப்படையச் செய்யுங்கள். கல்ப முன்னரும் ஆகியிருந்தீர்கள் என்றால் அது நீங்கள்தானே அல்லது வேறு யாரோவா? அவர்கள் நீங்கள்தான். உள்ளே அமிழ்ந்திருக்கிறது அதை வெளியே கொண்டுவாருங்கள். எப்படி சேவையின் திட்டங்களை நடைமுறையில் வெளியே கொண்டுவருகிறீர்கள், அப்போது வெற்றி கிடைக்கிறது இல்லையா. அப்படி இப்போது எல்லையற்ற வைராக்கிய உணர்வை வெளியே கொண்டுவாருங்கள். எவ்வளவுதான் சாதனங்கள் கிடைத்திருந்தாலும், நாளுக்கு நாள் உங்களுக்கு சாதனங்கள் அதிகமாகத்தான் கிடைக்கும் எனினும் எல்லையற்ற வைராக்கிய உணர்வின் சாதனை (முயற்சி) அமிழ்திருக்கக்கூடாது, வெளியே இருக்க வேண்டும். சாதனங்களும் சாதனைகளும் சமமாக இருக்க வேண்டும், ஏனெனில் இனிவரும் காலத்தில் இயற்கை உங்கள் சேவகராகிவிடும். கௌரவம் கிடைக்கும், மரியாதை கிடைக்கும். ஆனால் எல்லாம் கிடைத்த போதும் வைராக்கிய உணர்வு குறையக்கூடாது. எனவே எல்லையற்ற வைராக்கிய உணர்வின் வாயுமண்டலத்தை தனக்குள் அனுபவம் செய்கிறீர்களா அல்லது சேவையில் பிஸியாக இருக்கிறீர்களா? எப்படி உலகில் உள்ளோருக்கு சேவையின் பிரபாவத்தை காட்டுகிறீர்கள்! அப்படி எல்லையற்ற வைராக்கிய உணர்வின் பிரபாவம் தெரிய வேண்டும். ஆரம்பத்தில் உங்கள் அனைவருடைய மனோநிலை என்னவாக இருந்தது? பாகிஸ்தானில் இருந்தபோது, சேவை இல்லை, சாதனங்கள் இருந்தது ஆனால் எல்லையற்ற வைராக்கிய உணர்வின் வாயுமண்டலமானது சேவையை விரிவாக்கியது. எனவே யாரெல்லாம் வைரவிழா கொண்டாடுகிறீர்களோ அவர்களிடம் இருந்த ஆரம்பகால சமஸ்காரம் இப்போது அமிழ்ந்து போய்விட்டது. இப்போது மீண்டும் அந்த உணர்வை வெளியே கொண்டுவாருங்கள். ஆதி ரத்தினங்களின் எல்லையற்ற வைராக்கிய உணர்வானது ஸ்தாபனை செய்தது, இப்போது புது உலகின் ஸ்தாபனைக்காக மீண்டும் அந்த உணர்வை, அந்த வாயுமண்டலத்தை வெளிப்படுத்துங்கள். எது அவசியம் என்பதைக் கேட்டீர்களா? சாதனங்கள், எல்லையற்ற வைராக்கிய உணர்வை அமிழ்த்தி விடக்கூடாது. இப்போது உலகம் உச்சத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது எனவே இப்போது உண்மையான வைராக்கிய உணர்வு அவசியமாக இருக்கிறது மேலும் அந்த வாயுமண்டலத்தை உருவாக்குபவர்கள் நீங்கள்தான், முதலில் தனக்குள் கொண்டுவாருங்கள், பிறகு உலகத்தில் அதை கொண்டுவரலாம்.

நொடியில் அசரீரி ஆகவேண்டும் என்று பாபா எதை சொல்கிறாரோ, விரும்புகிறாரோ அதற்கு அஸ்திவாரமாக இருப்பது இந்த எல்லையற்ற வைராக்கிய உணர்வு, இல்லையென்றால் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் நொடியில் ஆகமுடியாது. யுத்தத்திலேயே நேரம் சென்றுகொண்டிருக்கும். ஆனால் எங்கே வைராக்கியம் இருக்கிறதோ,அந்த வைராக்கியம் தகுந்த பூமியாக இருக்கிறது, அதில் எதைப் போட்டாலும் அது விரைவாகப் பலன் கொடுக்கிறது. எனவே என்ன செய்ய வேண்டும்? போனது போகட்டும் நாமும் இனி வைராக்கிய உணர்வில் இருக்க வேண்டும் என்ற உணர்வு அனைவரிடமும் காணப்படுகிறது. நல்லது. என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா? 03.04.96

26. எல்லையற்ற வகையில் ஆற்றலைப்(சகாஸ்) பாய்ச்சுங்கள். சில குழந்தைகள் எல்லையற்ற வைராக்கியம் எப்படி வரும்? பார்த்தால் தெரியவில்லையே, என்று தனக்குத்தானே கேட்கிறார்கள், மற்றவரிடமும் கேட்கிறார்கள். ஆனால் எல்லையற்ற சேவையில் தன்னை பிஸியாக வைத்திருந்தால் எல்லையற்ற வைராக்கியம் தானாகவே வந்துவிடும். ஏனெனில் இந்த ஆற்றலைப் பாய்ச்சும் சேவையை நிரந்தரமாகச் செய்ய முடியும், இதில் உடல்நிலையின் விசயம், நேரத்தின் விசயம் எல்லாம் எளிதாக இருக்கிறது.இரவு பகலாக இந்தச் சேவையில் ஈடுபட்டிருக்க முடியுமா? எப்படி பிரம்மா பாபாவைப் பார்த்தீர்கள் அல்லவா! இரவில்கூட கண் விழித்திருந்தார் மேலும் எல்லையற்ற ஆற்றலைக் கொடுக்கும் சேவை நடந்துகொண்டே இருந்தது. எனவே இந்த எல்லையற்ற சேவை அவ்வளவு பிஸியாக்கிவிடுகிறது அதன்மூலம் உள்ளத்தில் எல்லையற்ற வைராக்கிய உணர்வு தானாகவே வந்துவிடுகிறது. நிகழ்ச்சிகள் மூலமாக வராது. இதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என திட்டங்களை உருவாக்குகிறீர்கள், எனினும் எல்லையற்ற சேவையில் பிஸியாக இருக்க வேண்டும் - இதுவே அனைத்திலும் சிறந்த சாதனமாக இருக்கிறது ஏனெனில் எப்போது எல்லையற்ற ஆற்றலைத் தருகிறீர்களோ அப்போது அருகில் இருப்பவர்கள் தானாகவே ஆற்றலைப் பெற்றுக்கொண்டிருப்பார்கள். இந்த எல்லையற்ற ஆற்றலைத் தருவதன் மூலமாக வாயுமண்டலம் தானாக உருவாகிவிடும். 28.11.97

27. இப்போது நேரத்திற்குத் தக்கபடி அனைவரும் எல்லையற்ற வைராக்கிய உணர்விற்குள் சென்றேயாக வேண்டும். எனினும் குழந்தைகளுக்கு நேரம் ஆசிரியராகிவிடக்கூடாது என பாப்தாதா நினைக்கிறார், பாபா ஆசிரியராக இருக்கும்போது நேரத்தின்படி ஆவதென்பது நேரத்தை ஆசிரியராக்குவதாகும். அதில் மதிப்பெண்கள் குறைந்துவிடுகிறது. இப்போதுகூட சில குழந்தைகள் நேரம் கற்றுத்தரும், நேரம் மாற்றிவிடும் என்று சொல்கிறார்கள். நேரம் வரும்போது முழு உலகத்தின் ஆத்மாக்களும் மாறிவிடுவார்கள் எனினும் குழந்தைகள் நீங்கள் நேரத்திற்காக காத்திருக்காதீர்கள். நேரத்தை உங்கள் ஆசிரியராக்காதீர்கள். நீங்கள் உலக ஆசிரியரின் மாஸ்டர் உலக ஆசிரியராக இருக்கிறீர்கள், படைப்பவராக இருக்கிறீர்கள், நேரம் உங்கள் படைப்பு எனவே ஏ! படைக்கும் ஆத்மாக்களே படைப்பை ஆசிரியராக்காதீர்கள். பிரம்மா பாபா அவர்கள் நேரத்தை தனது ஆசிரியராக்கவில்லை, எல்லையற்ற வைராக்கியம் ஆரம்பத்தில் இருந்து கடைசிவரை இருந்து வந்தது. எவ்வளவு உடலைக் கொடுத்தார், மனதைக் கொடுத்தார், செல்வத்தைக் கொடுத்தார் என்பதை ஆரம்பத்தில் பார்த்தீர்கள், எனினும் கொஞ்சம்கூட அவைகளின்மீது பற்று வைக்கவில்லை. உடலைக்குறித்து சொல்லும் போது இது பாபாவின் ரதம், இது என்னுடைய உடலே அல்ல, பாபாவின் ரதம் என்று சொல்லிவந்தார். நான் சாப்பிடுகிறேன் எனச் சொல்லாமல் பாபாவின் ரதத்திற்கு உணவு கொடுக்கிறேன், என இயல்பாக சொல்லிவந்தார். உடலின்மீதும் எல்லையற்ற வைராக்கியம் கொண்டிருந்தார். மனமோ மன்மனாபவ என இருந்து வந்தது. செல்வத்தையும் ஈடுபடுத்தினார், ஆனால் நான் என் செல்வத்தை செலவிடுகிறேன் என ஒருபோதும் நினைத்ததில்லை. எனது செல்வம் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது, நான் என் செல்வத்தைக் கொடுத்தேன் என ஒருபோதும் சொல்லவில்லை. பாபாவின் பண்டாரா (உணவு கூடம்), போலேநாதரின் பண்டாரா என்றார். பணத்தை தனது என நினைத்து தன் சொந்த உபயோகத்திற்காக ஒரு ரூபாய் பொருமானமுள்ள பொருளைக்கூட பயன்படுத்தவில்லை. கன்னியர்கள், தாய்மார்களுடைய பொறுப்பு எனச் சொல்லி அவைகளை கன்னியர்கள் மற்றும் தாய்மார்களிடம் ஒப்படைத்தார், தனதென்பது இருக்கவில்லை. நேரத்தையும் சுவாசத்தையும் தனக்காக பயன்படுத்தவில்லை, அதன்மீதும் எல்லையற்ற வைராக்கியம் உடையவராக இருந்தார். இப்படி எல்லா வகையிலும் இயற்கை தாசியாக இருந்தபோதும் எந்த அதிகப்படியான சாதனத்தையும் பயன்படுத்தவில்லை. எப்போதும் சாதாரணமாகவே வாழ்ந்து வந்தார். எந்த ஒரு ஸ்பெஷலான பொருளையும் தான் பயன்படுத்தியதில்லை. உடையில்கூட, கடைசிவரை ஒரேமாதிரியான உடையையே அணிந்து வந்தார். அதை மாற்றவில்லை. குழந்தைகளுக்காக கட்டிடங்களை கட்டினார் ஆனால் தான் அதை பயன்படுத்தவில்லை, குழந்தைகள் சொன்ன பிறகும்,

அதைக்கேட்டபிறகும் விலகியே இருந்தார். எப்போதும் குழந்தைகளின் அன்பைப் பார்த்து வந்த போதும், எல்லாம் குழந்தைகளுக்கே என சொல்லிவந்தார். எனவே இப்படி இருப்பதைத்தான் நடைமுறை வாழ்வில் எல்லையற்ற வைராக்கிய உணர்வுடன் இருப்பது என்று சொல்லப்படுகிறது. கடைசியில் பாருங்கள், குழந்தைகள் முன்னால் இருக்க, கை பற்றி இருந்தது எனினும் பற்று இருந்ததா? எல்லையற்ற வைராக்கிய உணர்வே இருந்தது. அன்பான குழந்தைகள், நெருக்கமான குழந்தைகள் முன்னால் இருந்தபோதும் எல்லையற்ற வைராக்கியம் இருந்தது. நொடியில் விலகியிருக்கும் உணர்வை, எல்லையற்ற வைராக்கிய உணர்வின் நிரூபணத்தைப் பார்த்தீர்கள். ஒரேயொரு ஈடுபாடு இருந்தது, சேவை, சேவை, சேவை … மற்ற எல்லா விசயங்களில் இருந்தும் விலகி இருந்தார். இப்படி இருப்பதைத்தான் எல்லையற்ற வைராக்கியம் என்று சொல்லப்படுகிறது. இப்போது நேரத்தின்படி எல்லையற்ற வைராக்கிய உணர்வை வெளிப்படுத்துங்கள். எல்லையற்ற வைராக்கிய உணர்வு இல்லாமல் ஆற்றலை (சகாஸ்) அளிக்கும் சேவை நடைபெற முடியாது. தந்தையைப் பின்பற்றுங்கள். சாகாரத்தில் பிரம்மா பாபா இருந்தார், நிராகாரரின் விசயத்தை விடுங்கள். சாகாரத்தில் சர்வ பிராப்திகளின் சாதனங்கள் இருந்தபோதும், அனைத்து குழந்தைகளின் பொறுப்பு இருந்தபோதும், இக்கட்டான சூழ்நிலைகளும், பிரச்சினைகளும் வந்தபோதும் பாஸாகிவிட்டார் இல்லையா! பாஸ் வித் ஹானரின் சர்டிபிகேட் பெற்றுவிட்டார். அதற்கான முக்கிய காரணம் எல்லையற்ற வைராக்கிய உணர்வு. இப்போது சூட்சும தங்க சங்கிலிகளின் பற்று, மிக நுண்ணிய சூட்சும பற்றுகள் நிறைய இருக்கின்றன. சில குழந்தைகள் இது பற்று என அறியாது, பற்றென்றால் என்னவென்றே தெரியாமல் இருக்கின்றனர். இவைகள் இப்படித்தானே நடந்து வருகிறது, இது வழக்கம்போல நடப்பதுதானே என நினைக்கிறார்கள். இவைகளில் இருந்து விடுபடவேண்டும் என்பது புரியவில்லை. ஆனால் அப்படித்தான் நடந்து வருகிறது. அனேக விதமான பற்றுகள் எல்லையற்ற வைராக்கியம் உடையவராக இருக்க விடுவதில்லை. ஆகவேண்டும் என்று விரும்புகிறார்கள், ஆகியே தீரவேண்டும் என்று நினைக்கவும் செய்கிறார்கள். ஆனால் விருப்பம் செயல் இரண்டும் சமமாக இருப்பதில்லை. விருப்பம் அதிகமாகவும் செயல் குறைவாகவும் இருக்கிறது. செய்தே தீரவேண்டும் என்ற வைராக்கிய உணர்வு இப்போது வெளிப்படவில்லை. இடையிடையே தோன்றுகிறது, பின்னர் அமிழ்ந்துவிடுகிறது. நேரம் செய்ய வைத்தே தீரும் எனினும் பாஸ் வித் ஹானர் ஆகமுடியாது. பாஸாவீர்கள் ஆனால் பாஸ் வித் ஹானராக முடியாது. நேரத்தின் வேகம் அதிகமாக இருக்கிறது, முயற்சியின் வேகம் குறைவாக இருக்கிறது. மேம்போக்கான முயற்சி இருக்கவே செய்கிறது ஆனால் சூட்சும பற்றால் கட்டப்பட்டுவிடுகிறீர்கள். இப்போது நேரத்திற்குத் தக்கபடி பற்றில் இருந்து விடுபட்டு எல்லையற்ற வைராக்கியம் உடையவராகுங்கள். மனதில் வைராக்கியம் எழ வேண்டும். நிகழ்ச்சிகளின்படி வரும் வைராக்கியம் அற்பகாலத்திற்கே இருக்கும். தனது சூட்சும பற்றுகளை கண்டறியுங்கள். பெரிய விசயங்கள் இப்போது முடிந்து விட்டதா? 18.01.98

28. இப்போதய வாயுமண்டலத்தின்படி மனதில், இப்போது உளமார வைராக்கிய உணர்வை எழச் செய்யுங்கள் என பாப்தாதா இந்த ஒரு விசயத்தைக் குறித்து மீண்டும் கவனம் கொடுக்கச் சொல்கிறார். பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்கள் குடும்பத்தில் இருந்தாலும் சரி, சேவை நிலையங்களில் இருந்தாலும் சரி அல்லது எங்கிருந்தாலும் சரி ஒவ்வொருவருக்கும் ஸ்தூல சாதனங்களைக் கொடுத்திருக்கிறார், உண்ண, குடிக்க, வசிக்க போதிய சாதனமில்லை என்று சொல்லும்படி எந்தவொரு குழந்தையும் இல்லை. அவர்கள் எல்லையற்ற வைராக்கிய உணர்வில் இருந்தாலும், தேவைப்படும் அவசியமான சாதனங்கள் எல்லோரிடமும் இருக்கிறது. ஒருவேளை யாரிடமாவது ஏதாவது குறைவாக இருந்தால் அது அவரது அலட்சியம் அல்லது சோம்பலின் காரணமாக இருக்கிறது. மற்றபடி, அவசியமான பொருட்கள் நாடகப்படி அனைவரிடமும் இருப்பதை பாப்தாதா அறிந்திருக்கிறார். எது அவசிய சாதனமோ அது இருக்கவே செய்கிறது. ஆனால் சில இடங்களில் தேவைக்கு அதிகமான

சாதனங்களும் காணப்படுகின்றன. சாதனை (முயற்சி) குறைவாக இருக்கிறது, சாதனங்களை உபயோகிப்பது மற்றும் உபயோகிக்கச் செய்வது அதிகமாக இருக்கிறது. எனவே பாப்தாதா இன்று பாப்சமான் ஆவதற்கான நாளில், சாதனங்களை உபயோகிக்கும் அனுபவம் நிறைய செய்துவிட்டீர்கள், என்ன செய்தீர்களோ அதை மிக நன்றாகச் செய்தீர்கள், இப்போது சாதனையை (முயற்சியை) அதிகப்படுத்துங்கள் அதாவது எல்லையற்ற வைராக்கிய உணர்வை கொண்டுவர வேண்டும் என்பதை சிறப்பாக கீழ்கோடு இடுகிறார். பிரம்மா பாபாவைப் பார்த்தீர்கள் அல்லவா கடைசி நிமிடம்வரை குழந்தைகளுக்கு நிறைய சாதனங்களைக் கொடுத்து வந்தார் ஆனால் தான் சாதனங்களை உபயோகிப்பதிலிருந்து தூர இருந்தார். எல்லாம் இருந்த போதும் தூர இருப்பதையே, வைராக்கியம் என்று சொல்வார்கள். ஆனால் ஒன்றுமே இல்லாத போது நான் வைராக்கியம் உடையவனாக இருக்கிறேன், நான் இருப்பதே வைராக்கியமாகத் தான் என்று சொன்னால் அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். அந்த விசயமே தனி. எல்லாம் இருந்தபோதும், ஞானம் மற்றும் உலக நன்மையின் பாவனையோடு, பாபாவையும் தன்னையும் வெளிப்படுத்தும் பாவனையோடு, இப்போது சாதனங்களுக்குப் பதிலாக எல்லையற்ற வைராக்கிய உணர்வு இருக்க வேண்டும். எப்படி ஸ்தாபனையின் ஆரம்பத்தில் சாதனங்களுக்கு குறைவிருக்கவில்லை, எனினும் எல்லையற்ற வைராக்கிய உணர்வின் பட்டியில் (சூளை) இருந்து வந்தீர்கள். பதினான்கு ஆண்டுகள் தவம் செய்தபோது அது எல்லையற்ற வைராக்கிய உணர்வின் வாயுமண்டலமாக இருந்தது. பாப்தாதா அவர்கள் இப்போது நிறைய சாதனங்களை கொடுத்திருக்கிறார், சாதனங்களுக்கு இப்போது எந்த குறைவும் இல்லை ஆனால் எல்லாம் இருந்தபோதும் எல்லையற்ற வைராக்கியம் இருக்க வேண்டும். உலகிலுள்ள ஆத்மாக்களின் நன்மைக்காகவும் இந்த நேரம் இந்த விதி அவசியமாக இருக்கிறது. ஏனெனில் நாலாபுறமும் ஆசைகள் அதிகமாகின்றன, ஆசையின் காரணத்தால் ஆத்மாக்கள் கவலையில் இருக்கிறார்கள், கோடீஸ்வரராக இருக்கிறார்கள் எனினும் ஆசையின் வசத்தால் கவலையில் இருக்கிறார்கள். வாயுமண்டலத்தில் ஆத்மாக்களுடைய கவலைக்கு முக்கிய காரணமாக இருப்பது இந்த எல்லைக்குட்பட்ட ஆசைகள். இப்போது நீங்கள் உங்கள் எல்லையற்ற வைராக்கிய உணர்வு மூலமாக அந்த ஆத்மாக்களிடத்திலும் வைராக்கிய உணர்வை பரப்புங்கள். உங்களுடைய வைராக்கிய உணர்வின் வாயுமண்டலமில்லாமல் ஆத்மாக்கள் சுகவாசியாகவும், அமைதி உடையவராகவும் ஆகமுடியாது, கவலையில் இருந்து விடுபடமுடியாது. நீங்கள் மரத்தின் வேராக இருக்கிறீர்கள், பிராமணர்களுடைய இடமாக மரத்தில் எந்த இடம் காட்டப்பட்டிருக்கிறது. வேர் காட்டப்பட்டிருக்கிறது இல்லையா! எனவே நீங்கள்தான் வேராக இருக்கிறீர்கள், உங்கள் அலை உலகில் பரவும் எனவே பாப்தாதா விசேசமாக சாகாரத்தில் பிரம்மா பாபாவிற்குச் சமமாவதற்கான விதியான, வைராக்கிய உணர்வின் பக்கம் விசேச கவனம் கொடுக்கச் சொல்கிறார். இவர்கள் சாதனங்களின் வசத்தில் இல்லை, சாதனையில் இருப்பவர்கள் என்பது ஒவ்வொருவரின் அனுபவமாக இருக்க வேண்டும். எல்லாம் இருந்தபோதும் வைராக்கிய உணர்வோடு இருங்கள். அவசியமான சாதனங்களை பயன்படுத்துங்கள் ஆனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு உள்ளத்தின் வைராக்கிய உணர்வோடு பயன்படுத்துங்கள், சாதனங்களுக்கு வசமாகி பயன்படுத்தாதீர்கள். இப்போது சாதனையின் வாயுமண்டலத்தை நாலாபுறமும் உருவாக்குங்கள். நேரம் நெருங்கி வருவதற்குத் தக்கபடி இப்போது உண்மையான தபஸ்யா அல்லது சாதனையே எல்லையற்ற வைராக்கியமாகும். சேவையின் வளர்ச்சி இந்த வருடம் நிறைய செய்துவிட்டீர்கள். இந்த வருடம் எல்லாப் பக்கமும் மிகப் பெரிய நிகழ்ச்சிகளை நடத்திவிட்டீர்கள் அதோடு சேவையின் மூலமாக பலரை உதவிசெய்யும் ஆத்மாக்களாகவும் செய்துவிட்டீர்கள். அருகில் வந்திருக்கிறார்கள், தொடர்பில் வந்திருக் கிறார்கள், ஆனால் வெறும் உதவியாளாக மட்டும் செய்ய வேண்டுமா என்ன? இந்த அளவில் வைக்க வேண்டுமா என்ன? உதவிசெய்யும் ஆத்மாக்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள், அந்த உதவிசெய்யும் தரமான ஆத்மாக்களை இப்போது சம்பந்தத்தில் கொண்டு வாருங்கள். அனுபவம் செய்ய வையுங்கள், அதன்மூலம் சகயோகியில் (உதவி செய்பவர்) இருந்து சகஜயோகி ஆகிவிடவேண்டும். அதற்காக ஒன்று சாதனையின் வாயுமண்டலம் இருக்க

வேண்டும். இரண்டாவதாக எல்லையற்ற வைராக்கிய உணர்வின் வாயுமண்டலம் இருக்க வேண்டும். அப்போது அதன்மூலம் சகஜ சகயோகி சகஜ யோகியாகிவிடுவார். அவர்களுக்கு என்ன சேவை செய்ய வேண்டுமோ செய்துவாருங்கள் ஆனால் கூடவே சாதனா, தபஸ்யாவின் வாயுமண்டலம் அவசியம் இருக்க வேண்டும்.

இப்போது எல்லாப் பக்கமும் சக்திமிக்க தபஸ்யா செய்ய வேண்டும், அந்த தபஸ்யா மனசேவைக்கு நிமித்தமாக வேண்டும், அப்படிப்பட்ட சக்திமிக்க சேவையை இப்போது தபஸ்யா மூலமாக செய்ய வேண்டும். இப்போது மனசேவையின் மூலமாக அதாவது எண்ணங்களின் மூலமாக சேவையின் 'டச்சிங' நிகழ வேண்டும், அது அவசியமாக இருக்கிறது. நேரம் நெருங்கி வருகிறது, நிரந்தர மனோநிலைகளும், நிரந்தர சக்திமிக்க வாயுமண்டலமும் அவசியமாக இருக்கிறது. பாப்சமான் ஆகவேண்டும் என்றால் முதலில் எல்லையற்ற வைராக்கிய உணர்வை கொண்டுவாருங்கள். இந்த விசேசத்தை பிரம்மா பாபாவின் கடைசிகாலம் வரை பார்த்தீர்கள். எந்த ஆடம்பரத்தின்மீதும் ஆர்வம் இருக்கவில்லை, எந்த குழந்தைமீதும் பற்று இருக்கவில்லை, அனைத்தின்மீதும் வைராக்கிய உணர்வு இருந்தது. எனவே இன்றைய நாளில் பாப்சமான் ஆவதற்கான பாடத்தை உறுதி செய்ய வேண்டும். பிரம்மா பாபாவிற்குச் சமமாக ஆகியே தீரவேண்டும் அவ்வளவுதான். அப்படிப்பட்ட உறுதியான நம்பிக்கை நிச்சயம் உங்களை முன்னேற்றும்.

இப்போது எதை நினைவில் வைத்திருக்கிறீர்கள்? எந்த விசயத்தை 'அன்டர்லைன்' செய்திருக்கிறீர்கள்? எல்லையற்ற வைராக்கியம். இப்போது ஆத்மாக்களை ஆசையில் இருந்து விடுவியுங்கள். பாவம் மிக துக்கத்தில் இருக்கிறார்கள். மிகவும் கவலையில் இருக்கிறார்கள். எனவே இப்போது கருணை உள்ளம் உடையவர் ஆகுங்கள். கருணையின் அலைகளை எல்லையற்ற வைராக்கிய உணர்வு மூலமாக பரப்புங்கள். இப்போது எல்லோரும் மிக உயர்ந்த பரந்தாமத்தில் பாபாவோடு அமர்ந்து அனைத்து ஆத்மாக்களுக்கும் இரக்கத்தின் திருஷ்டி கொடுங்கள். எண்ண அலைகளை பரப்புங்கள். பரப்ப முடியுமல்லவா? எனவே இப்போது பரந்தாமத்தில் பாபாகூட அமர்ந்துவிடுங்கள் அவ்வளவுதான். அங்கிருந்து இந்த எல்லையற்ற கருணையின் வாயுமண்டலத்தைப் பரப்புங்கள் (பாப்தாதா டிரில் செய்ய வைத்தார்) 18.01.1999

29. இப்போதுகூட வைராக்கிய உணர்வு வரவில்லை என்றால் எப்போது ஆரம்பமாகப்போகிறது என்பதை பாப்தாதாவும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது சாதனங்களை பயன்படுத்துவதில் அதிக அனுபவியாக இருக்கிறீர்கள். எதுவரை பிராமணர்களிடத்தில் எல்லையற்ற வைராக்கிய உணர்வு எழவில்லையோ அதுவரை உலகத்திலும் வைராக்கிய உணர்வு வரமுடியாது என்பது பாப்தாதாவிற்குத் தெரியும். முழு உலகிலும் உருவாகும் வைராக்கிய உணர்வே கொஞ்சமாவது பாவத்தில் இருந்து விடுதலை தரும். இப்போது சக்திசேனைக்கு இரக்கம் வரவேண்டும். இப்போது இரக்கம் குறைவாக இருக்கிறது, சேவை இருக்கிறது. ஆனால் கருணை உள்ளம் என்பது இப்போது அதிகம் வெளிப்பட வேண்டும். பாவம் அவர்கள் பாவ செயல்களின் சுமைகளை இறக்க விரும்புகிறார்கள். சுமையால் வளைந்துகொண்டே போகிறார்கள். எனவே இரக்கம் வரவேண்டும், கருணை வரவேண்டும். 30.03.1999

30. இப்போது வள்ளலாகுங்கள், இரக்கமனம் உடையவராகுங்கள். இது எப்போது நடக்கும், எப்போது இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து தனக்குள் எல்லையற்ற வைராக்கிய உணர்வை வெளிப்படுத்துகிறீர்களோ அப்போதே இரக்கம் வரும். இந்த தேகத்தின், தேக உணர்வின் நினைவு வருவதுகூட எல்லையற்ற வைராக்கிய உணர்வில் உள்ள குறைவேயாகும். சின்னச்சின்ன எல்லைக்குட்பட்ட விசயங்கள் நிலையை தடுமாற்றம் அடையச் செய்கிறது, காரணம்? எல்லையற்ற வைராக்கிய உணர்வு குறைவாக இருக்கிறது, பற்று இருக்கிறது.

வைராக்கியம் இருக்கவில்லை, பற்று இருக்கிறது. எப்போது முற்றிலும் எல்லையற்ற வைராக்கியம் உடையவர் ஆகிவிடுகிறீர்களோ, உணர்விலும் வைராக்கியம், பார்வையிலும் எல்லையற்ற வைராக்கியம், சம்பந்தம் தொடர்பு, சேவை என அனைத்திலும் எல்லையற்ற வைராக்கியம் உடையவராக இருக்கிறீர்களோ அப்போது முக்திதாமத்தின் கதவு திறக்கும். இப்போது எந்த ஆத்மாக்கள் வருகிறார்களோ அவர்கள் பின்னர் பிறவி எடுக்கிறார்கள், பிறகு துக்கப்படுகிறார்கள். இப்போது முக்திதாமத்திற்கான கதவை திறப்பதற்கு நிமித்தமாக இருப்பவர்கள் நீங்கள்தானே? பிரம்மா பாபாவிற்கு துணைவர்கள் இல்லையா? எனவே எல்லையற்ற வைராக்கிய உணர்வே கதவைத் திறக்கும் சாவியாக இருக்கிறது. இப்போது இன்னும் சாவி போடப்படவில்லை, சாவியை இன்னும் தயாராக்கவே இல்லை. பிரம்மா பாபாவும் காத்துக்கொண்டு இருக்கிறார். அட்வான்ஸ் பார்ட்டியும் காத்துக்கொண்டு இருக்கிறார்கள், இயற்கையும் காத்துக்கொண்டிருக்கிறது, நிறைய சலித்துப்போய்விட்டார்கள். மாயாவும் தனது நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறது. இப்போது சொல்லுங்கள், ஏ! மாஸ்டர் சர்வசக்திவான்களே, என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்? 31.12.2004

31. இப்போது எல்லையற்ற வைராக்கிய உணர்வின் வாயுமண்டலத்தைப் பரப்ப வேண்டும். அது சேவை நிலையமாகட்டும், உலகமாகட்டும், உலகத்திற்கும்கூட வைராக்கிய உணர்வின் வாயுமண்டலம் அவசியமாக இருக்கிறது, ஏனென்றால் குற்றங்களும் பாவங்களும் அதிகமாகிக்கொண்டிருக்கின்றன. வைராக்கிய உணர்வில்லாமல் இந்த ஆத்மாக்களுக்கு நன்மை உண்டாகாது. செய்தி கொடுக்கும் செயலாக எதை செய்து கொண்டிருக்கிறீர்களோ அதை நன்றாக செய்துகொண்டிருக்கிறீர்கள். பாப்தாதாவிற்கு பிடித்திருக்கிறது ஆனால் அதன்மூலம் சகயோகி (உதவக்கூடியவர்) ஆகிறார்கள், மைக் ஆகிறார்கள். உங்களைப்போன்று பாபாவிற்கு வாரிசு குழந்தைகளாக, சமர்ப்பண குழந்தைகளாக குறைவாகவே ஆகிறார்கள். நாலாபுறங்களிலும் உள்ள சேவை மையங்களில் வைராக்கிய உணர்வு நிறைந்திருப்பது அவசியமாக இருக்கிறது. வைராக்கிய உணர்வு என்பது வெறும் உண்பது, குடிப்பது, அணிவதில் கிடையாது, சாதனங்களில் கிடையாது, ஆனால் முழு மானசீக உணர்வில், பார்வையில், செயலில் என அனைத்திலும் இருக்க வேண்டும். நாலாபுறமும் உள்ள ஜோன்களில் இப்போது வைராக்கிய உணர்வின் மூலம் விலகி (உப்ராம்) இருக்கும், தேகவுணர்வில் இருந்து விலகி (உப்ராம்) இருக்கும் அலைகள் இப்போது இருக்க வேண்டும். எல்லையற்ற வைராக்கிய உணர்வு, முதலில் தேகவுணர்வின்மீது வைராக்கிய உணர்வு, உடல் விசயங்களின்மீது வைராக்கிய உணர்வு, தேகத்தின் உணர்வு, பாவனை இவைகளின்மீது வைராக்கிய உணர்வு தேவை. எனவே பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளிடம் இந்த கவனத்தை ஈர்க்கிறார். அதாவது தீவிர வேகத்தின் மூலமாக பிராமணர்களிடமோ அல்லது சகயோகி ஆத்மாக்களிடமோ சிறந்த உன்னத நிலை எப்போது தோன்றும் என்றால் எப்போது வைராக்கிய உணர்வின் வாயுமண்டலத்தை தன்மீதும் எல்லோர்மீதும் பரப்புகிறீர்களோ அப்போதே சப்தம் பரவும். அனைத்து துறையைச் சேர்ந்தவர்களும் இதையே யோசிக்கிறீர்கள், பிரத்தியட்சம் செய்ய விரும்புகிறீர்கள், நிகழ்ச்சிகளை நடத்துகிறீர்கள் எனினும் இதுவரை நடக்கவில்லை, ஏன்? காரணம் நாலாபுறமும், அது பாவ செயலாகட்டும், குற்றங்களாகட்டும், விசயங்களாகட்டும், தனது நிலையாகட்டும் இவற்றின்மீது வைராக்கிய உணர்வு வரவில்லை. எனவே பிரத்தியட்சம் எளிதில் நடைபெற முடியவில்லை. எனவே இப்போது நாலாபுறமும் எல்லையற்ற வைராக்கிய உணர்வு எழ வேண்டும், பிரம்மா பாபாவை கடைசிவரை பார்த்தீர்கள் இல்லையா, எவ்வளவு எல்லையற்ற வைராக்கிய உணர்வு இருந்து வந்தது. தனது தேகத்தின்மீதும் வைராக்கிய உணர்வு, குழந்தைகளின் சம்பந்தத்திலும் வைரக்கிய உணர்வு. எனவே என்ன செய்வீர்கள்? இந்த இலட்சியத்தை இலட்சணத்தில் கொண்டுவாருங்கள். 18.01.2008

32. ஒரு விசயத்தை அனுபவம் செய்ய வைப்பதற்கு தன்மீது கவனம் கொடுக்க வேண்டும். சேவை இப்போது உங்களை பிரபலமாக்கிக்கொண்டிருக்கிறது. மகிழ்ச்சியும் அடைந்துகொண்டு இருக்கிறீர்கள் மேலும் இந்த நாட்களில் மாணவர்களும் அதிமாகிக்கொண்டே போகிறார்கள். மற்றபடி இப்போது அனுபவம் செய்ய வைப்பதற்கான விதி எது? ஊக்க உற்சாகம் நிறைந்து இருப்பது, எந்த அளவு ஊக்க உற்சாகம் இருக்கிறதோ அதே அளவு நேரத்தின்படி இப்போது எல்லையற்ற வைராக்கிய உணர்வும் தேவைப்படுகிறது. முயற்சியில் ஏதாவது பிரச்சினை ரூபமாகிறதென்றால்,எல்லையற்ற வைராக்கிய உணர்வில் இருக்கும் குறைவே அதற்குக் காரணமாக இருக்கிறது. இப்போது எல்லையற்ற வைராக்கியம் இருக்க வேண்டும். எல்லையற்ற வைராக்கியம் என்றால் அது சதாகாலமும் இருக்கும். ஒருவேளை நேரப்படி வந்தால் அப்போது நேரம் ஒன்றாம் நம்பராகிவிடுகிறது, நீங்கள் இரண்டாம் நம்பராகிவிடுகிறீர்கள். நேரமானது உங்களுக்கு வைராக்கியத்தை கொடுத்தது. எல்லையற்ற வைராக்கியம் சதாகாலமும் இருக்கும். ஒருபுறம் ஊக்கம், உற்சாகம் சந்தோஷம் மற்றொறு புறம் எல்லையற்ற வைராக்கியம். எல்லையற்ற வைராக்கியம் நிரந்தரமாக இல்லாமல் போவதற்கான காரணம் என்ன? தேக அபிமானமே காரணமாக இருப்பதை பாப்தாதா அவர்கள் பார்த்தார்கள். தேகம் என்ற வார்த்தை எல்லாப் பக்கமும் வருகிறது – உதாரணமாக தேகத்தின் சம்பந்தம், தேகத்தின் பொருள், தேகத்தின் சமஸ்காரம் என தேகம் என்ற சப்தம் அனைத்திலும் வருகிறது. மேலும் தேக அபிமானம் விசேசமாக எந்த விசயத்தில் வருகிறது? ஆத்ம அபிமானத்தில் இருந்து தேக அபிமானத்திற்கு கொண்டுவருகிறது. பழைய சமஸ்காரம் கீழே கொண்டுவருவதற்கு மூல காரணமாக இருப்பதை பாப்தாதா கண்டறிந்தார். சமஸ்காரத்தை அகற்றி இருக்கிறீர்கள் எனினும் ஏதாவது காரணத்தால் சமஸ்காரம் பழக்கத்தின் ரூபத்தில் இப்போதுகூட வேலை செய்துவிடுகிறது. எப்படி தேக அபிமானத்தின் பழக்கம் இயல்பாகிவிட்டதோ அப்படி ஆத்ம அபிமானத்தின் பழக்கம் இயல்பாகவில்லை. நாங்கள் அழித்துவிட்டோம் என்று சொல்கிறீர்கள் எனினும் ஒரே மூச்சில் விதையை எரித்து சாம்பலாக்கவில்லை. எனவே நேரம் வரும்போது மீண்டும் அந்த தேகவுணர்வின் சமஸ்காரம் வெளிவந்துவிடுகிறது. எனவே இப்போது சக்திமிக்க ஆத்ம அபிமானத்தின் சக்தியால் வம்ச சகிதமாக இந்த தேகவுணர்வின் பழக்கத்தை நாசம் செய்வது அவசியமாக இருக்கிறது, ஏனெனில் விரும்பவில்லை எனினும் அவ்வப்போது வெளிவந்து விடுகிறது என்று குழந்தைகள் சொல்கிறார்கள். ஏன் வெளிவருகிறது? அம்சம் இருக்கிறது எனவே வம்சமாகி வெளிப்படுகிறது. எனவே சக்திசொரூபமாவது இப்போது அவசியமாக இருக்கிறது. இதுவே ஆதாரமாக இருக்கிறது. ஏதாவது சொரூபத்தில் அம்ச அளவாவது பழைய தேக உணர்வின் சமஸ்காரம் மிச்சம் இருக்கவில்லையா? என தன்னைத் தானே பாருங்கள். எல்லையற்ற வைராக்கிய உணர்வின் மூலமாகவே அது அழிந்துபோகும். சேவையைப் பார்த்து பாப்தாதா சந்தோஷப்படுகிறார் ஆனால் இப்போது பாபா விரும்புவது என்னவென்றால் சேவையின் ஜொலிப்பு இப்போது மக்களுக்கு வெளியே தெரிகிறது. சேவையின் அனுபவம் ஏற்படுகிறது. அதேபோல எல்லையற்ற வைராக்கிய உணர்வின் பிரபாவம் தெரிய வேண்டும் ஏனென்றால் இன்றைய காலத்தில் சேவையின் மூலமாக உங்களுடைய புகழ் அதிகமாகும், இயற்கை உங்களுக்கு தாசியாகும். உங்களுக்கு அனுபவத்தை ஏற்படுத்தும், சாதனங்கள் அதிகமாகும் ஆனால் எல்லையற்ற வைராக்கிய உணர்வின் மூலமாக சாதனங்களும் சாதனைகளும் சமநிலையில் இருக்கும். எப்படி நீங்கள் இல்லறத்தில் இருப்பவர்களுக்கு, எல்லாம் செய்தபோதும் கர்மயோகியாக தாமரை மலருக்கு சமமாக இருக்க வேண்டும் என்று உதாரணம் தருகிறீர்கள் அல்லவா, அதேபோல நீங்கள் எல்லோரும்கூட சேவை செய்தபோதும், சாதனங்கள் கிடைத்தபோதும், சாதனங்களும் சாதனைகளும் சமநிலையில் இருக்கவேண்டும். எனவே இன்றைய காலத்தில் சேவையின் கூடவே எல்லையற்ற வைராக்கிய உணர்வையும் சேர்ப்பது அவசியமாக இருக்கிறது. இவர்கள் விசேச ஆத்மாக்கள் என்பதை போகும்போதும் வரும்போதும் அனுபவம் செய்ய வேண்டும். வெறும் யோகத்தில் அமரும் நேரத்தில்மட்டுமல்ல, சொற்பொழிவாற்றும் நேரத்தில் மட்டுமல்ல,

ஆனால் போகும்போதும் வரும்போதும் உங்கள் நெற்றியிலிருந்து அமைதி, சக்தி, மகிழ்ச்சியின் அனுபவம் அவ்வப்போது ஏற்படவேண்டும் ஏனெனில் இப்போது நேரம் மாறப் போகிறது.

எனவே பாப்தாதா அவர்கள் அவ்வப்போது சைகை காட்டி விட்டார் ஆனால் இன்று விசேசமாக பாப்தாதா, ஒன்று எல்லையற்ற வைராக்கியத்தின் பக்கம் சைகை காட்டுகிறார், அதற்காக இப்போது தன்னை சோதனை செய்து ஆத்ம அபிமானத்தில் இருப்பதற்கு தடையாக இருப்பது எதுவோ அந்த தேக அபிமானத்தை, அனேக விதமான தேக அபிமானத்தின் அனுபவம் உங்களுக்கு இருக்கிறதல்லவா, அதனை மாற்றிவிடுங்கள். பிறகு இரண்டாவது விசயம் நீண்ட காலத்தைப் பற்றியும் நீங்கள் யோசியுங்கள். நீண்ட காலப் பயிற்சி தேவை. நீண்ட கால முயற்சிக்கு நீண்ட கால பலன் கிட்டும். ஒருவேளை இப்போது அதிககாலத்தை குறித்து குறைந்த கவனம் செலுத்தினால் கடைசி காலத்தில் அதிக காலத்திற்கான சேமிப்பை செய்ய முடியாது. ‘டூலேட்’ போர்டு போடப்பட்டுவிடும் எனவே பாப்தாதா இன்று அடுத்த வருடத்திற்கு வீட்டுப்பாடம் தருகிறார். 07.04.2009